
உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI

| மலர் 8 | தாரண - பங்குனி | March - April 2005 | இதழ் 12 |
|---|---|---|---|



ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. அகத்தியர் தேவாரத் திரட்டு - திருவிருத்தம் .................... 2

2. சைவபூஷணம் தமிழ் விளக்கம் ................................ 3

3. சித்தர்களின் தத்துவ ஞானங்கள் ............................ 5

4. சிவஞானபோதம் ........................................... 7

5. சொல்லரசர் தில்லைசெல் வழிச் சிறப்பு ...................... 11

6. எல்லாம் ஈசன் செயல் ..................................... 14

7. திருத்தாண்டகம் திருவாசகம் ஓரவதானிப்பு ..................... 15

8. நாவலரே மீண்டும் வருக .................................... 19

9. ஆறுமுகநாவலரின் சைவ மறுமலர்ச்சிப்பணி ..................... 22

10. THE RISE OF ASURAS ..................................... 26

11. சந்தேகம் தெளிதல் ......................................... 28



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் 8 தாரண - பங்குனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 12

## சிந்தனை செய்

உலகில் உள்ள அனைத்தும் மூன்று பிரிவில் அடங்கும். தானே அறியும் பொருள் அது பதி. அறிவித்தால் அறியும் பொருள் அது பசு. அறிவித்தாலும் அறிய மாட்டாதது பாசம். பதியினைப்போல் பசு பாசம் அனாதி என்பார் திருமூலர்.

பதியாகிய இறைவன் இன்பவடிவினன். பசு ஆகிய ஆன்மா பாசத்தில் கட்டுண்டு துன்பத்தை அனுபவிக்கிறது.

ஆன்மாக்களுக்கு அருள வேண்டி இறைவன் அருள்திருமேனி தாங்கி தனு, கரண, புவன போகங்களைப் படைத்தருளினான். எழுவகைப் பிறப்பினுள்ளும் மனிதப்பிறவியே மேலானது.

மனிதன் என்ற சொல்லிற்கு நினைப்பவன் என்று பொருள். விலங்குகள் சிந்திப்பதில்லை. ஆதலால் அவற்றின் வாழ்வு ஒரேமாதிரியாக அமைந்திருக்கின்றது. மனிதன் பல விதத்திலும் முன்னேறிவிட்டான். சமய நெறியில் முன்னேற்றம் உண்டா?

நான் யார்? இந்தப் பிறவி எதற்காகக் கிடைத்தது? போன்றவற்றைச் சிந்திக்க வேண்டும். கிடைத்த இந்தப் பிறவி மூலம் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குச் சிந்திக்க வேண்டும். 'சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்' என்பார் அருணகிரிநாதர். சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருநாளும் இல்லை' என்பது ஔவைப்பிராட்டி வாக்கு.

ஏனைய சிந்தனை பிறவிக்கு வித்தாகும் சிவசிந்தனை, சிவநாம சிந்தனை ஒன்றே உய்தி தரவல்லது. சிறுதெய்வ வணக்கத்தை விடுத்து சிவனைச் சிந்தித்து வந்திப்பதே நன்மை பயக்கும்.

**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**
**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி: 2580458

உ
சிவமயம்

அகத்தியர் தேவாரத் திரட்டு

## திருநாவுக்கரசு சுவாமிகள்

## நான்காந் திருமுறை - திருவிருத்தம்

### அடிமை

பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்

குலம்பலம் பாவரு குண்டர்முன்
னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல்
ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 1

மற்றிட மின்றி மனைதுறந்
தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட்
டேனுக்கும் உண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ
டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 2

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்
முன்னமக் குண்டுகொலோ
செருவடி செஞ்சிலை யாற்புரம்
அட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்திரு வாரூர்த்
திருமூலட் டானன்செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 3

மாசினை யேறிய மேனியர்
வன்கண்ணர் மொண்ணரைவிட்(டு)
ஈசனை யேநினைந் தேசறு
வேனுக்கும் உண்டுகொலோ
தேசனை ஆரூர்த் திருமூலட்
டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 4

அருந்தும் பொழுதுரை யாடா
அமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று
வாழ்த்துவேற்(கு) உண்டுகொலோ
திருந்திய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 5

வீங்கிய தோள்களுந் தாள்களு
மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணும் மூடர்முன்
னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த்
திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 6

பண்ணிய சாத்திரப் பேய்கள்
பறிதலைக் குண்டரைவிட்(டு)
எண்ணில் புகழீசன் தன்னருள்
பெற்றேற்கும் உண்டுகொலோ
திண்ணிய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானன்எங்கள்
புண்ணியன் தன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 7

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக்
கச்சுகம் என்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ
திருப்பொலி ஆரூர்த் திருமூலட்
டானன் திருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 8

கையி லிடுசோறு நின்றுண்ணங்
காதல் அமணரைவிட்(டு)
உய்ய நெறிகண்டிங் குய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ
ஐயன் அணிவயல் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலானடித் தொண்டருக்குத்
தொண்டராம் புண்ணியமே. 9

குற்ற முடைய அமணர்
திறமது கையகன்றிட்(டு)
உற்ற கருமஞ்செய் துய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ
மற்பொலி தோளான் இராவணன்
தன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 10

திருச்சிற்றம்பலம்

மார்கழி இதழின் தொடர்ச்சி.....

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

சிவபெருமானுக்கு, காமிகம் இரண்டு திருவடிகள். யோகஜம் இரண்டு கணைக்கால்கள். சிந்தியம் திருவடிகளின் விரல்கள். காரணம் இரண்டு தண்டைக்கால்கள். அஜிதம் இரண்டு முழந்தாள்கள். தீப்தம் இரண்டு துடைகள். சூக்குமம் சூய்யம். சகஸ்ரம் இடுப்பு. அம்சுமான் முதுகு. சுப்ரபேதம் தொப்புள். விஜயம் வயிறு. நிசுவாசம் மூக்கு. சுவாயம்புவம் இரண்டு தனங்கள். ஆக்நேயம் இரண்டு திருக்கண்கள். வீரம் கழுத்து. ரௌரவம் இரண்டு திருச்செவிகள். மகுடம் திருமுடி. விமலம் நான்கு திருக்கரங்கள். சந்த்ரஞானம் மார்பு. முகபிம்பம் திருமுகம். புரோத்கீதம் நாக்கு. லளிதம் இரண்டு கன்னங்கள். சித்தம் நெற்றி, சந்தானம் காதணிகளான குண்டலங்கள். சர்வோக்கம் யக்ஜோபவீதம். பாரமேஸ்வரம் முத்துமாலை. கிரண எழும், அகளம். வாதுளம் திருப்பரிவட்டம். இவ்வாறு இந்த ஷோடசிகம், ஆகமங்கள் தவிர உபாகமங்களுள் காலோத்தரம்னும் சோமயக்சு. ஏனைய உபாகமங்கள் பரிமள திரவியங்களும் பாரிவ்ராஜ்யம்கும். எல்லா ஆகமங்களின் ஞானபாதமாகிய சைவ வைதீக சமஸ்வேத்தியமாகிய அமுது. இவ்வாறு காமிகமுதலி கொள்க. ஆகமங்கள் இருபத்தெட்டும் காலோத்தர முதலிய உபாகமங்கள். (இருநூற்றேழும் தாண்டவேசுவர சுவாமியாகிய சிதம்பரசுவாமிக்குச் சகல அவயங்களுடனே கூடியிருக்குமென ஆகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

மூலாகமத்தின் பேதங்கள் உபாகமங்களாகும். வருமாறு :-

1. காமிகத்தின் பேதம் - நாரசிம்மம், வக்திராரம், பைரவோத்தரமென மூன்று.
2. யோகஜத்தின் பேதம் - வீணாசிகோத்தரம், தாரம், சந்தம், சந்ததி, ஆன்மயோகம் என ஐந்து.
3. சிந்தியத்தின் பேதம் - சுசிந்தியம், சுபகம், வாமம், பாவநாசம், பரோத்பவம், அமிர்தம் என ஆறு.
4. காரணத்தின் பேதம் - காரணம், பாவநம், தௌர்க்கம், மாகேந்த்ரம், வீமம், மாரணம், துவேஷ்டம் என ஏழு.
5. அஜிதத்தின் பேதம் - பிரபூதம், பரோத்பூதம், பார்வதீ சம்கிதை, பத்மசம்கிதை என நான்கு.
6. தீப்தத்தின் பேதம் - அமேயம், சப்தம், ஆச்சாத்யம், அசங்கியம், அமிதௌசசம், ஆனந்தம், மாதவோத்பூதம், அத்புதம், அச்சதம் என ஒன்பது.
7. சூக்குமத்தின் பேதம் - சூக்குமம் ஒன்று.
8. சகஸ்ரத்தின் பேதம் - அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், பிரபுத்தம், விபுதம், அஸ்த்தம், அலங்காரம், சுபோதகம் எனப்பத்து.
9. அம்சுமானின் பேதம் - வித்தியாபுராணதந்த்ரம், வாசவம், நீலலோகிதம், பிரகாரணம், பூததந்த்ரம், ஆத்மாலங்காரம், காசியபம், கௌதமம், அயிந்த்ரம், பிராம்யம், வாசிஷ்டம், ஈசானம் எனப்பன்னிரண்டு.
10. சுப்ரபேதத்தின் பேதம் - சுப்ரபேதமென ஒன்று.

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்** 611

ஒருசெயலைச் செய்யும்போது தம்மைச் சிறியவராகக் கருதி, அச்செயல் தம்மால் செய்வதற்கு அரியது என்று தளராமை வேண்டும். முயற்சியே, அச் செயலை செய்து முடிப்பதற்கு ஏற்ற பெருமையைத் தரும்.

11. விஜயத்தின்பேதம் - விஜயம், உத்பவம், சௌமியம், அகோரம், ம்ருத்யுநாசனம், குபேரம்,மகாகோரம், விமலம் என எட்டு.

12. நிசுவாசத்தின் பேதம் - நிசுவாசம், உத்தர நிசுவாசம், நிசுவாச முகோதயம், நிசுவாச நயனம், நிசுவாச காரிகை, கோரசம்ஞ்யம், யமாக்யம், குய்யம் என எட்டு.

13. சுவாயம்புவத்தின்பேதம் - பிரஜாபதிமதம், பத்மம், சுவாயம்புவம் என மூன்று.

14. ஆக்நேயத்தின் பேதம் - ஆக்நேயம் ஒன்று

15. வீரத்தின்பேதம் - பிரஸ்தாரம், புல்லமல்லம், பிரபோதம், போதம், போதகம், அமோகம், மோகசமயம், ஹாடகம், சாகடாதிகம், ஹலம், விலேகனம், பத்ரம், வீரம் எனப் பதின்மூன்று.

16. ரௌரவத்தின்பேதம் - காலக்நம், கலாதீதம், ரௌரவம், ரௌரவோத்தரம், மகாகாளமாதம், ஐயிந்திரம் என ஆறு.

17. மகுடத்தின்பேதம் - மகுடம், மகுடோத்தரம் என இரண்டு.

18. விமலத்தின்பேதம் - அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், வ்ருஷோத்தரம், வருஷாத்புதம், சுதந்தம், ரௌத்ரம், பத்ரவிதம், அரேவதம், அதிக்கிராந்தம், அட்டகாசம், அலங்கிருதம், அருச்சிதம், தாரணம், தந்திரம் எனப் பதினாறு.

19. சந்த்ரஞானத்தின் பேதம் - ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுவரம், ஏகபாதபுராணம், சங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், கல்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவிமதம் எனப்பதினான்கு.

20. முகபிம்பத்தின்பேதம் - சதுர்முகம், மலயம், அயோகம், சமஸ்தோபம், ப்ரதிவிம்பகம், ஆத்மாலங்காரம், வாயவ்யம், தௌடிகம், துடிநீரகம், கலாத்யயம், துலாயோகம், குட்டிமம், பட்டசேகரம், மகாவித்தை, மகாசௌரம் எனப் பதினைந்து.

21. புரோத்கீதத்தின் பேதம் - கவசம், வராகம், பிங்களமதம், பாசபந்தம், தண்டதரம், அங்குசம், தனுர்தரம், சிவஞானம், விக்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்ப்பதம் ஷ்ட்ரீ விபேதனம், கீதம், பரதம், ஆதோத்யம் எனப்பதினாறு.

22. லளிதத்தின்பேதம் - லளிதம், லளிதோத்தரம், கௌமாரம் எனமூன்று.

23. சித்தத்தின்பேதம் - சாரோத்தரம், ஔசனோத்தரம், சாலாபேதம், சசிகண்டம் என நான்கு.

24. சந்தானத்தின் பேதம் - லிங்காத்யக்ஷம், சுராத்யக்ஷம், சங்கரம், அமலேஸ்வரம், அசங்கியம், அனிலம், துவந்துவம் என ஏழு.

25. சர்வோக்தத்தின்பேதம் - சிவதருமோத்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம் என ஐந்து.

26. பாரமேசுவரத்தின் பேதம் - மதங்கம், யக்ஷிணீ பத்மம், பாரமேசுவரம், பௌஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், சாமான்யமென ஏழு.

27. கிரணத்தின்பேதம் - காருடம், நைருதம், நீலம், ருக்ஷம், பானுகம், தேனுகம், பிரபுத்தம், புத்தம், காலம் என ஒன்பது.

28. வாதுளத்தின் பேதம் - வாதுளம். உத்தரவாதுளம், காலக்ஞானம், ப்ரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேஷ்டம், நித்யம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாத்மகம் எனப் பன்னிரண்டு.

(அடுத்த இதழில் தொடரும் ..............)

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு** 612

ஒரு செயலை முடிக்காமல் அரைகுறையாய் விட்டவரை உலகம் கைவிடும், ஆகையால் செயலாற்றும் போது செயல் அறுதலைத் (தொடர்ச்சியின்றி இடையீடுபடுதலைத்) தவிர்க்க வேண்டும்.

# சித்தர்களின் தத்துவ ஞானங்கள்

ஞானசிரோமணி, சைவப்புலவர்மணி, வித்துவான் கலாபூஷணம் திரு. வ. செல்லையா

சென்ற இதழின் தொடர்ச்சி.....

"கொட்டி முழக்கி அழுவர் மயானங்குறுகி அப்பால் எட்டியும் அடிவையார் உற்றார் உறவினர்" என்பது அவர் வாதம். இவற்றையெல்லாம் மனங்கொண்டு இவ்வளவு வரை இவர்கள் தொடர்பு என்று வரையறை காட்டுகிறார் இன்னுமொரு மேதை. இதனை வள்ளுவரும்

"குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு."

சித்தர்களும் மற்றுமுள்ள மெஞ்ஞானிகளும் எவ்வளவு இடித்துரைத்தாலும் எங்கள் மனம் கொள்ளுமா? என்பது கேள்விக்குறியே!

உடம்பும் அதன் நிலை பற்றியும் இன்னுமொரு சித்தர் தத்துவக் கருத்துக்களையும் பார்ப்போம்.

"நந்த வனத்திலோர் ஆண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தான்ஒரு தோண்டி
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி."

இதில் ஆன்மா (கரு) தாயின் வயிற்றில் பத்து மாதங்களும், அதன்பின் உடம்போடு உலாவி பின் உயிர் பிரியுமாற்றினைச் சித்தர் சித்தரிக்கிறார். இங்கு குயவன் என்பவர் பிரமன். பானை செய்பவன் குயவன். இங்கு உடம்பாகிய பானையைச் செய்பவனைக் குறித்து வந்தது. இவ்வுடம்பு ஓட்டைப் பானைதான். இதற்கு ஒன்பது ஓட்டையாகிய வாசல் உண்டென்கிறார் ஒரு சித்தர்.

"ஐந்து கல்லால் ஒரு கோட்டை
அந்த ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்"

என்பது ஒருவரின் வாதம். இந்த வாசல் ஒன்றின் மூலம் இறுதியில் உயிர் பிரிவதும் உறுதி. இந்த உடல் "மாயாயந்திரதனு" என்று சைவசித்தாந்திகளால் அழைக்கப்படுகிறது. இதனை இயக்க இரண்டு சாரதிகள். ஒன்று ஆன்மா என்று கூறப்படும் உயிர். மற்றது ஆன்மாவின் உள் நின்று இயக்கும் இறைவன். இது அபூர்வயந்திரம் என்பது சைவசித்தாந்தங் கூறும் உண்மை. சைவசித்தாந்திகளும் சித்தர் மரபினரே. இவர்களில் முதன்மையானவர்கள் திருமூலர், மெய்கண்டார் போன்றோர் ஆவர். உடம்பு மாயாமல காரியம். மாயாகாரியம் அழியுந்தன்மையது, நிலையில்லாதது. அதில் குடிபுகும் ஆன்மாவோ நித்தியமானது. அழியும் தன்மையற்றது. இறைவன் சத்து, மலம் அசத்து. ஆன்மா சத்துமன்று அசத்துமன்று; சதசத்து. சத்து + அசத்து = சதசத்து என்பது முடிந்த முடிபு. இங்ஙனம் ஒரு தெளிவான முடிவை யாங்கணும் காணல் அரிது.

நிலையானதும் அறிவுடைப் பொருளானதுமான ஒன்றினையே நாம் பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். அதுதான் பரம்பொருள். நிலையில்லாத பொருள்களில் பற்று வைத்து ஏமாந்து போவது மனித இயல்பு. கடவுளைப் பற்றற்றான் என்றே வள்ளுவர் கூறுகிறார். அவன் தாளில் பற்று வைத்து அவனைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்பது அவரின் அறிவுரை. "பற்றுக பற்றற்றான் தாளினை" என்பதே அவரின் தத்துவம். ஏனெனில் "அப்பற்று விடற்கு"

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு 613

எல்லார்க்கும் உதவி செய்தல் என்னும் பெருமிதம், விடா முயற்சி என்று சொல்லப்படும் உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.

என்பதனால் என்க. நாம் எல்லாப் பற்றையும் விடற்கு அது வொன்றே வழி. நமக்கு அதனால் கிடைப்பது பேரின்பம். பேரின்பம், சிற்றின்பம் என்று இரண்டினைக் கூறுகிறது உலகம். இறைவன் மாட்டுப் பெறுவது பேரின்பம். இது நிலையானதும் அழியாததும் ஆகும். இதனைப் பெறும் மார்க்கம் இலகுவானது அல்ல. தவ, விரத, அநுட்டானங் களாலும், தியானம், யோகம், நிஷ்டை முதலிய வற்றாலும் பல்லாண்டுகாலம் முயன்றால் ஒருவேளை பேரின்பம் கைகூடப் பெறலாம், அன்றி அது கைகூடாமலும் போகலாம். அதனைக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் என்பது தத்துவ ஞானிகளாகிய சித்தர்கள் கூறும் உண்மையாகும்.

இனிச் சிற்றின்பமாவது உலகியற் பொருள் களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் இன்பமாகும். இது நீடு நிற்பதில்லை. அவ்வப்போது மாத்திரம் நிகழ்வது. இங்கு ஒன்றினைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சிற்றின்பமென்றபோது பலரும் நினைப்பது ஆணும் பெண்ணும் கூடி முயங்கிப் பெறுவது என்பதே. அதற்கு மாத்திரம் தொன்றுதொட்டு முக்கியத்துவம் வழங்கிவருவதும் தப்பானதேயாகும். உண்டுடுத்து உறங்கிச் சுகம் பெறுவது, காட்சிகளைக் கண்டுகளிப்பது என்பன முதலாக ஐம்புலன் நுகர்வுகள் அனைத்துமே சிற்றின்பம் தான். மல சல விமோசனத்தாலும் சுகம் பெறுவதுண்டு. அதுகூடப் பெறாதவர் துன்பமும் நாம் அறிந்ததே. ஆகவே சிற்றின்பம் சிறிது நேரம் நிலைத்து அழிந்துவிடுவது. மறுகணங்கூட அவ்வின்பத்தை நினைக்கவும் முடியாது ஏங்குவதுண்டு.

சித்தம் தெளிய மருந்து ஒன்றிருந்தால் அது பேரின்பந்தான். அதனைப் பெற்றுய்யச் சித்தர் காட்டிய வழியில் நாம் நிற்கவேண்டும். அத்துடன் முயலவும் வேண்டும். இறைவழிபாட்டிலும் நமக்கும் சித்தர்களுக்கும் முரண்பாடு உண்டு. நாம் ஆலயம் எழுப்பிச் சிலை வைத்து ஆகம நெறியின்படி வழிபாட்டைக் கைக்கொள்ளுவோம். அவர்களோ தம் தத்துவக் கொள்கையின்படி ஒழுகுவர். உள்ளத்திலே இறைவன் இருக்கிறான். புறவழிபாடு எதற்கு என்பது அவர்கள் வாதம். ஒரு சித்தர் கூறுவதைப் பார்ப்போம்.

“நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணு என்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லுப் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்”

என்பது அவரின் வாதம். சித்தர்கள் உள்ளத்திலே சிவனை வைத்துப் பூசிக்கிறார்கள். அவர்களுக்குப் புறவழிபாடு தேவையற்றது. நாம் நம்மை நெறிப்படுத்தப் புறவழிபாடு செய்தே ஆகவேண்டும். இது தவிர்க்கமுடியாததொன்று. சித்தர் காட்டும் நெறியை நாம் கைக்கொள்ளப் புறநெறி வழிபாட்டில் நிறைவுபெற வேண்டும். மானசக் காட்சிகளும் கைவரவேண்டும். அகமும் புறமும் தூய்மை பெறவேண்டும். நிறைவாக வள்ளுவர் கூறும் தத்துவத்தை மனங்கொண்டு பார்ப்போம்.

“தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.”

இதனை மனங்கொண்டு சித்தர் வழி நின்று மனக்கவலையை மாற்றுவோமாக. இதுவே மந்திரமும் மருந்தும் ஆகும்.

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்** 614

விடாமுயற்சி இல்லாதவன் எல்லார்க்கும் உதவி செய்தல், பேடி தன் கையில் வாளை எடுத்து ஆளும் தன்மை போலக் கெட்டழியும்.

# சிவஞானபோதம்

சென்ற இதழின் தொடர்ச்சி.........................

மட்டுவில் ஆ. நடராஜா

குணி - குணத்தையுடையது. உயிருக்குக் குணம் அறிவு இச்சை செயல்கள். புத்தர் குணமே உயிரென்பர். சாங்கியர் உயிர் அறிவு மாத்திரமான குணமேயன்றிக் குணிப்பொருளன் றென்பர். மாயாவாதிகள் உயிர் குணிப்பொருளன்று குணமேயென்பர். ஆதலால் இவர்கள் தம்மை உணராதவரே யாவர்.

பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவித சைவரும் தம்மை இறைவனது உடைமைப் பொருளெனக் கொள்ளினும் பாஞ்சராத்திரிகள் உடைமைப் பொருளாகிய உயிர் அணு பரிமாணமுடைய தென்பதுடன் இறைவனுக்குப் பரிணாமமுங் கூறுவர். உடையானாகிய நாராயணனே பல அவதாரங்களை யெடுத்தான் என்பது அவர்களு டைய கொள்கை. இப் பாஞ்சராத்திரிகள் உடையா னல்லாத நாராயணனை உடையானெனக் கூறி மயங்குவர்.

பரிமாணம் - அளவு. பரிணாமம் - உருத்திரிதல், இயற்கையினின்றும் மாறுபடுதல். சிவாத்துவித சைவர், பசு பாசங்கள் தனிப் பொருள்களன்று, சிற்சத்தியின் பரிணாமமேயெனவும், உடலிற் கட்டுப்பட்டிருக்கும் உயிர் சிவத்தின் வேறாகா மையால் உயிரின் பொருட்டுண்டாகும் தோற்றக் கேடுகள் சிவத்துக்கேயாமென்பர்.

"புறன்" என்பதை இரட்டுற மொழிந்து, புறச் சமயத்தார் இகழ்ந்துரைக்கும் மொழியெனவும் புறங்கூற்று மொழியெனவுங் கொள்க. புறங் கூற்று மொழியாவது சித்தாந்த சைவர் முன்னன் றிப் புறத்தே அவர்களை இழித்துரைக்கும் மொழியாகும்.

இரட்டுற மொழிதலாவது ஒரு சொல்லை இரண்டு பொருள்படக் கூறுதல்.

சித்தாந்த சைவர் எம்மை இகழாராதலால் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழார். உண்மையை உணராமையால் சித்தாந்த சைவ ரல்லாதார் எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைப்பதை நாம் பொருட்படுத்த மாட்டோம் என்பது இவ்வெண்பாவின் கருத்து.

நூலாசிரியர் இந்நூலின் வடமொழிச் சிவஞான போதத்திற் கூறப்படும் ஞானபாதப் பொருள் எல்லாவற்றையும் பொதுவதிகாரம் உண்மையதி காரமென இரண்டதிகாரங்களாகத் தொகுத்து, பொதுவதிகாரத்தைப் பிரமாணவியல் இலக்கண வியலென இரண்டியல்களாகவும் உண்மையதி காரத்தைச் சாதனவியல் பயனியலென இரண்டி யல்களாகவும் வகுத்து, பிரமாணவியலை மூன்று சூத்திரங்களாற் கூறத் தொடங்கி, முதலில் உலகத்துக்கு முதற் கடவுள் உண்டென்றால் பொதுவும் அக்கடவுள் சிவன் என்றால் சிறப்பு மாதலால், சிறப்பு வகையால் முதற் கடவுளாகிய சிவபெருமான் உண்டென்னும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துவதாய் அநுமானப் பிரமாணங் கூறுகின்றார்.

ஆகமத்திற் கூறப்படும் பொதுவியல்பு பிற பொருளோடு சம்பந்தப்பட்டிருத்தல், சிறப்பியல்பு பிறபொருளோடு சம்பந்தப்படாது தனித்திருத்தல். பொதுவியல்பு தடத்தலக்கண மெனப்படும். சிறப்பியல்பு சொரூபலக்கண மெனப்படும். பதிக்குப் பொதுவியல்பு ஆன்மாக்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்றல்; சிறப்பியல்பு

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்** 615

தன் இன்பத்தை விரும்பாதவனாய், தான் மேற்கொண்ட செயலை முடித்தலையே விரும்புகின்றவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்கும் தூண் ஆவான்.

சச்சிதானந்தமாய் நிற்றல்.

அநுமானப் பிரமாணம் - கருதலளவை, கருதலாவது நேரே அறியப்படாது மறைந்து நிற்கும் பொருளை அதனோடு தொடர்புடைய ஏதுவைக் கொண்டறியும் ஆன்மாவின் அறியுஞ் சக்தி. இதற்கு உதாரணம் :- ஓரிடத்திற் புகை தோன்றுவதைக் கண்டு அங்கே நெருப்பு உண்டென்று கருதுதல்.

**அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்**
**றோற்றிய திதியேயொடுங்கி மலத் துளதா**
**மந்த மாதி யென்மனார் புலவர்.**

**கருத்துரை :-** என்பது சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், சங்கார காரனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்து தனுதலிற்று,

**கருத்துரையின் பொருள் :-** நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னுங் கலைகளுக்குட்பட்ட ஐவகைச் சங்காரத்தின் இறுதிக் கண்ணதாகிய மகா சங்காரத்தைச் செய்யும் சதாசிவரை அதிட்டித்து நிற்கும் பரம சிவனையே அவன் அவள் அதுவென்று சுட்டியறியப்படும் உலகம் முதற்கடவுளாகவுடைய தென்று வேதாகமங்களுட் கூறப்படுவதை அநுமான அளவையால் உணர்த்துதல் இச் சூத்திரத்தின் கருத்து எ-று.

மேலே கூறப்பட்ட ஐந்து கலைகளிலும் தத்துவங்களும் புவனங்களும் உண்டு. அவற்றை முறையே பிரமன் முதலிய ஐந்து கடவுளர் சிவபெருமானது ஆணையினாற் சங்கரிப்பர். இது பற்றிய விபரம் வருமாறு:-

| கலைகள் | சங்காரக் கடவுளர் | கலைகளில் அடங்கும் புவனங்கள் | கலைகளில் அடங்கும் தத்துவங்கள் |
|---|---|---|---|
| நிவிர்த்தி | பிரமா | 108 | பிருதிவிதத்துவம் |
| பிரதிட்டை | விஷ்ணு | 56 | அப்புதத்துவம் முதல் பிரகிருதி தத்துவம் வரை |
| வித்தை | உருத்திரன் | 27 | புருடதத்துவம் முதல் மாயா தத்துவம் வரை |
| சாந்தி | அனந்தர் | 18 | சுத்த வித்தை முதல் சதாசிவ தத்துவம் வரை |
| சாந்திய தீதை | சதாசிவர் | 15 | சக்தி சிவ தத்துவங்கள் |

நிவிர்த்தி கலையில் அடங்குந் தத்துவங்களையும் புவனங்களையும் சங்கரிக்கும் கடவுள் பிரமா. இவ்வாறே மற்றைய கலைகளில் அடங்குந் தத்துவங்களையும் புவனங்களையுஞ் சங்கரிக்கும் கடவுளரைக் கண்டு கொள்க.

இந்த ஐந்து கடவுளரில் சிவபெருமான் சதாசிவரை அதிட்டிக்க சதாசிவர் அனந்தரையும் அனந்தர் உருத்திரரையும் உருத்திரர் விஷ்ணுவையும் விஷ்ணு பிரமாவையும் அதிட்டிக்க ஐவரும் தத்தம் மேல் எல்லைவரை சங்காரத் தொழிலைச் செய்வர்.

அதிட்டித்தல் :- நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.

இக்கருத்துரையில் முதலையே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை, இது இயைபின்மை நீக்குதற்கும் பிறிதினியை நீக்குதற்கும் பொதுவாய் நின்றது.

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை**
**இன்மை புகுத்தி விடும்.** **616**

விடாமுயற்சி, செல்வத்தை உண்டாக்கவும் வளர்க்கவும் செய்யும், அம்முயற்சி இல்லாமை ஒருவனை வறுமைக்குள் செலுத்தி விடும்.

**இயைபின்மை நீக்குதல்**

சங்காரக் கடவுளுக்கும் படைத்தல் காத்தற் தொழில்களுக்கும் தொடர்பில்லை என்பதை நீக்குதல்.

**பிறிதின் இயைபு நீக்குதல்**

சங்காரக் கடவுளைத் தவிர்ந்த ஏனைய கடவுளருக்குச் சங்கரிக்கும் உரிமை உண்டென்பதை நீக்குதல்.

சங்காரக் கடவுளுக்கும் படைத்தல் காத்தல் தொழில்களுக்கும் தொடர்பில்லை என்பதை நீக்கினால் சங்காரக் கடவுளுக்கும் படைத்தல் காத்தல் தொழில்களுக்கும் தொடர்புண்டென்பது பெறப்படும்.

சங்காரக்கடவுளைத் தவிர்ந்த ஏனைய கடவுளருக்குச் சங்கரிக்கும் உரிமை உண்டென்பதை நீக்கினால் சங்காரக் கடவுளைத் தவிர்ந்த மற்றைய கடவுளருக்குச் சங்கரிக்கும் உரிமையில்லை என்பது பெறப்படும். இதனால் முத்தொழில் செய்யும் உரிமை சிவனுக்கே உண்டென்பது வலியுறுத்தப்படுகின்றது.

இந்நூலிற் சூத்திரம், கருத்துரை மேற்கோள், ஏது திருட்டாந்தம் என்பன ஆசிரியராற் கூறப்பட்டவை.

**நூலாசிரியர் அருளியது**

இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க.

**இவ்வாக்கியத்தின் பொருள்:-** பிண்டப் பொழிப்புரை வார்த்திகப் பொழிப்புரை என்னும் இருவகைப் பொழிப்புரைகளுள் கண்ணழித்து (பதங்களைப் பிரித்து ஒவ்வொரு முடிவையும் ஒவ்வொரு அதிகாரமாக வகுத்து, மேற்கோள் ஏது திருட்டாந்தங்களுடன்) யாம் கூறும் வார்த்திகப் பொழிப்புரையைக் கொண்டு பிண்டப் பொழிப்புரை செய்து கொள்க.

இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க என ஆசிரியர் ஆணை தந்தமையினால் கண்ணழித்துரை பற்றிச் சூத்திரத்துக்குப் பதப் பொருள் கூறப்படுகின்றது.

**சூத்திரத்தின் பொருள் :-** அவன், அவள், அது எனும் அவை - அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் சுட்டி அறியப்படும் சொல்லும் அச் சொல்லாற் குறிக்கப்படும் பொருளுமாகிய இரண்டு பிரிவுகளுடைய பிரபஞ்சத் தொகுதி, மூவினைமையின் - தோன்றுதல், நிலைத்தல், ஒடுங்குதல் என்னும் முத்தொழில் உடைமையாலும் அறிவற்ற சடமாகிய பிரபஞ்சம் தானே தோன்றி நின்று ஒடுங்க மாட்டாதாதலாலும் - தோற்றிய திதியே ஒருவனாற் தோற்றப்பட்ட உள் பொருளேயாம், ஒடுங்கி (இன்) அது தோன்றும் போதுதான் ஒடுங்குவதற்குக் காரணமாய் நின்ற கடவுளினின்றும், மலத்து(ஆல்) உளதாம் - ஆணவ மலம் நீங்காமையால் மீளத் தோன்றுவதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர் இவ்வாறு தோன்றுதலால் சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற் முதற் கடவுள்.
ஏனையோர் முதற் கடவுளரல்லர் என அளவை நூலுணர்ந்தோர் கூறுவர் என்றவாறு.

அவை என்பது அவன் அவள் அது என்னும் தொகுதியைக் குறிக்கின்றது.
தொகுதி - கூட்டம் வினைமை - வினையுடைமை

பிரபஞ்சத் தொகுதியைத் தோன்றிய திதியெனத் தன்வினை வாய்ப்பாட்டாற் கூறாமல் தோற்றிய திதியெனப் பிறவினை வாய்ப்பாட்டாற் கூறியமையால் அதைத் தோற்றுவித்தவர் யார் என்னும் வினா அதற்குரிய விடையை அவாவி நின்றது. அவ்வவா நிலை காரணமாக, ஒருவனாற் தோற்றப்பட்டதாய் உள்பொருளேயாமென உரை செய்யப்பட்டது.

மடி உளாள் மாமுகடி என்ப மடிஇலான்
தாள் உளான் தாமரையி னாள் 617

கரிய மூதேவி, ஒருவனது சோம்பலில் தங்குவாள், திருமகள், சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியில் தங்குவாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

திதி என்பதற்குக் காவல் என்பது பொருள் காவல் காத்தற்குரிய உள்பொருளுக்கே யாத லால் இவ்விடத்தில் திதி என்பதற்கு உன் பொருளேயாம் என உரைசெய்யப்பட்டது.

தோன்றி நின்று ஒடுங்குதலாகிய முத்தொழி லும் உடைமையால் பிரபஞ்சம் உள்பொருளே யாகுமென்பதையும் உள்பொருளாகிய பிரபஞ்சத் தைத் தோற்றுவித்து நிலைபெறச் செய்து ஒடுங்குவதற்கு ஒரு கருத்தா வேண்டப்படு மென்பதையும் வலியுறுத்துவதற்காக மூவினை மையிற் தோற்றிய திதியே என்றார்.

திதியே என்றதிலுள்ள ஏகாரம் உள்ள பொருளேயாகுமென உறுதியாகக் கூறுதலால் தோற்றம் ஒடுங்கி என்பது பிரபஞ்சம் ஒடுங்குதற்கு ஆதாரமாய் நின்ற கடவுளைக் குறிக்கின்றது.

ஒடுங்கி என்பதில் இன்உருபும் மலத்து என்பதில் ஆல் உருபும் தொக்கு நின்றன அவ்வுருபுகளை விரித்து ஒடுங்கியின் எனவும் மலத்தால் எனவுங் கொண்டு உரை செய்யப் பட்டது.

பிரபஞ்சத்துக்கு அந்தத்தைச் செய்யும் அந்தமில்லாத கடவுளை அந்தமென்று கூறியது உபசாரம்.

உலகம் கண்ணாற் காணக்கூடிய பொருள் கடவுள் கண்ணாற் காணமுடியாத பொருள் உலகம் காணப்படுதலால் அதை ஆக்கியவன் ஒருவன் இருத்தல் வேண்டுமெனும் அநுமானப் பிரமாணங் கொண்டு கடவுள் உண்டென சாதிக்கக் கருதிய நுலாசிரியர் தோற்றிய திதியே என்றும் உலகம் தான் ஒடுங்குதற்கு நிலைக்கள மாகிய கடவுளில் ஒடுங்கி அக் கடவுளால் மீளத் தோன்றுமெனக் குறிப்பிடுவதற்காக ஒடுங்கியள்ளதானெவும் உலகின் மேல் வைத்துக் கூறினார்.

கருத்துரையில், சங்கார காரணனாகிய முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகமெனக் கூறியதும் காணப்பட்ட உலகத்தைக் கொண்டு கடவுள் உண்டென்பதை உணர்த்தக் கருதியதா லேயாம்.

இச்சூத்திரம் மூன்று அதிகரணங்களை யுடையது அவனவளது வெனு மவை மூவினை மையின் என்பது ஓரதிகரணம் தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என்பது மூன்றதிகரணத்தை உள்ளடக்கியதோர் அதிகரணம், அந்திமாதி - யென்மனார் புலவர் என்பது ஒரதிகாரம்.
அதிகரணம் - கூறு

இம்மூன்று கூறுகளும் முறையே ஒன்றற் கொன்று ஏதுவும் பயனுமாய் ஒரு பொருள் மேல் வருதலால் ஒரு சூத்திரமாகக் கூறினார்.

அவனவளது வெனு மவை மூவினைமையின் என்பது ஏது தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம் என்பது பயன்.

தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம் என்பது ஏது அந்தமாதி யென்மனார் புலவர் என்பது பயன்.

அதிகரணத்தில் மேற்கோள், ஐயப்பாடு, பிறர்கூறும்பக்கம், ஏது, திருட்டாந்தம் எனப்படும் ஐந்து உறுப்புகள் அடங்கும்.
மேற்கோள் - தன்னாற் கூறப்படும் பொருள்
ஏது - பிறர் கூறும் பக்கத்தை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிவு; காரணம்.
திருட்டாந்தம் - உதாரணம் இயைபு
மேற்கோளில் - ஐயப்பாடும் பிறர் கூறும் பக்கமும் அடங்கும்.

**பொறிஇன்மை யார்க்கும் பழியன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.** 618

ஆக்கம் தரும் ஊழ் இல்லாதிருத்தல், யார்க்கும் குற்றமாகாது. அறிய வேண்டியவற்றை அறிந்து. செய்ய வேண்டிய செயல்களை விடா முயற்சியோடு செய்யாதிருத்தலே குற்றமாகும்.

# சொல்லரசர் தில்லைசெல் வழிச் சிறப்பு

சிவ. சண்முகவடிவேல்

திருநாவுக்கரசு நாயனார் சொல்லுக்கு ஒரு அரசராதலால் நாவுக்கரசு என்று நவில்வார். நம்பரே நாவுக்கரசு என்னும் நன்னாமத்தை நல்கினார். மருணீக்கியார் திருவதிகை வீரட்டானம் என்னும் திருத்தலத்தில் நின்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சிவபெருமான் மீது "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்னுஞ் சொற் றொடரோடு தொடங்கும் திருப்பதிகத்தை ஓதினார். அதிகைப் பொருமானுடைய திருவருளால் ஆகாயத்தில் அசரீரியாக நன்னாமம் ஒலித்தது.

**'நாவுக் கரசென் றுலகே ழினுநின்**
**னன்னா மநயப் புறநண் ணுக'** என்று எல்லோரும் வியப்படைய வான்வெளியில் விளங் கக் கேட்டது. அந் நன்னாளிலிருந்து மருணீக்கியார் நாவுக்கரசு என்று நானிலத்தில் அழைக்கப்பட்டார்.

திருநாவுக்கரசு நாயனாருக்கு மருணீக்கியார் வாகீசர், உழவாரப்படையாளி, தமிழாளி, வாய்மை திறம்பா வாகீசர் போன்ற அளவற்ற திருநாமங்கள் செகத்தில் உண்டு.

அவற்றுள் நாவுக்கரசு என்னும் திருப்பெயர் திருவதிகைப் பெருமானால் சூட்டப் பெற்ற பெருமைக்குரியது. அது ஐந்து எழுத்தால் ஆன திருப்பெயர். அதனால் சிவ மந்திரம் போன்றது. அப்பூதி அடிகள் நாயனார் அத்திருமந்திரத்தை தியானித்த பேற்றால், அம்பலத்தில் ஆடும் செம்பொருள் திருவடி எய்தும் பேறு பெற்றார்.

அப்பூதி அடிகளார் திருநாவுக்கரசு நாயனார் செப்பூதியமாகக் கொண்டு சிறப்புப் பெற்றமை யைப் பெரியபுராணம்,

**'இவ்வகை யரசின் பாதமேத்தியெப் பொருளு நாளும்**
**அவ்வருந் தவர்பொற் றாளே யெனவுணர்ந் தடைவார் செல்லும்**
**செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்று ளாடும்**
**நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழ னன்னி னாரே'**

என்று அரிய தழிழால் உரிய முறையில் எடுத்து ஓதும்.

திருநாவுக்கரசு நாயனார் தமது வழிநடை வழி பாட்டில் "பார் வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்து ஏத்திப்" பரவிச் செல்லும் நாளில் தில்லை தரிசனத்தைச் சிரமேல் தாங்கினார்.

நாவுக்கரசர் தூங்கானை மாடத்துச் சுடர்க் கொழுந்தின் அடி பரவிப் பின்னர் திருவரத்துறை திருமுதுகுன்றம் முதலாம் திருத்தலங்களைத் தரிசனம் பண்ணினார். வண்தழிழ் மொழி மாலை தண்ணளிக்கும் இன் தமிழால் இயம்பினார். மண்ணுலகோர் அன்றி விண்ணுலகோரும் கண்மழை பொழிந்து பண்ணிசை பரப்பப் பாடிக் கிழக்குத்திசை வழி நிவா நதிக் கரையாக நடப்பார்.

அம்பலத்தில் அருட்கூத்து ஆடுகின்ற ஆடல் வல்ல பெருமானுடைய நாட வரிய நற்பாதங் களைப் பணிய விரும்பினார் திருநாவுக்கரசர்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.** 619

ஒருவன் மேற்கொண்ட முயற்சி, ஊழ்வலியால் வெற்றி பெறாமல் போனாலும், அம் முயற்சியில் உடம்பு பட்டபாட்டின் அளவுக்குப் பயன் தரும், தராமல் போகாது.

ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொள்ளத் தேன்துளி சிந்தும் பூஞ்சோலைகள் பொருந்திய புலியூரின் பக்கமாக வந்து அணைந்தார்.

நாவரசர், நான்முகன் நாராயணன் நாடற் கரியவர் நடமாடும் தில்லையின் எல்லையில் பூமியில் மேனி பொருந்த வணங்கினார். மேன் மேலும் ஆசை பொங்க வருவார். சோலைகளில் களிப்புற்று மயில்கள் மகிழ்ந்து எதிரும் புதிருமாக நின்று ஆடுகின்றன. தடாகங் களில் தாமரை மலர்கள் முகமாக மலர்ந்து விளங்கும் மருத நிலத்தில் குளிர்ந்த வயல் வழியாக வருகின்றார் வாசீகர்.

பள்ளங்களில் மணமும் நெருங்கிய இதழ் களும் நிறைந்த தாமரை மலர்கள் விளங்கு கின்றன. முதிய எருமைகள் புதிய பூக்களை மேய்கின்றன. அருகில் நெருங்கிய காடு போல உயர்ந்த மூங்கில் போலக் கரும்புகள் காட்சி கண்ணிற்கு விருந்து. கரும்பகளின் முதிர்ந்த கணுக்களிலிருந்து முத்துக்கள் சொரிகின்றன. வயல் எங்கும் காணப்படும் அக்காட்சி பெரிய வருடைய திருவேடப் பொலிவைக் கண்டு உள்ளம் உருகி அன்பின் மிகுதியினால் கண்ணீர் மழை பொழிவன போலக் காணப்படுகின்றன.

அறிவில் பெரியவரான திருநாவுக்கரசு நாயனார் அயலிலுள்ள நெல் வயல்கள் பின்னா கத் தாம் முன்னாகக் கடந்து வருகின்றார். சூழ்ந்த மரக் கிளைகளின் மேலே குயில்கள் பயிலு கின்றன. கூவும் குயில் உணர்த்துவது இது.

**'பிறவிப் பகை நெறிகளை விடுவீர்! இருவினை கள் பெருகித் தொடர்ந்து கட்டும் பாசம் விட்டு நீங்க வந்து சேருங்கள்'.**

இவ்வாறாகக் கூவும் குயிலும் செறியும் மரங் களும் நெருங்கும் அழகிய திருநந்தன வனங் களை எம்பெருமானார் எதிர் கண்டார்.

கண்ட நாயனார் பணிவோடு தொழுது கொண்டு செல்லுகின்றார். அழகிய மரக் கொம்பு களின் மேலும் பக்கங்களிலும் வளரும் சிறகு டைய கிளிகளும் சிறிய நாகண வாய்ப் பறவை களும் பார்க்கின்றன. முற்பிறவியில் தவஞ் செய்தலால் திருத்தொண்டு என்னும் தன்மையில் தலை சிறந்த உயர்ந்த தமிழ் அரசருடைய திருவடிவினைப் பார்த்துப் பரவசமடைகின்றன. இது அதிசயம் என்றுரைத்து எதிரே வருகின்றன. சிவபெருமானைத் துதிக்க முன்பு தாம் பயின்ற மொழிகளால், "அரகர" என்று பகர்கின்றன. (அரகர என்ற மந்திரத்தின் அருமையைத் திருமந்திரம் செப்பும் சிறப்பு இது.

**'அரகர என்ன அரியதொன் றில்லை**
**அரகர என்ன அறிகிலர் மாந்தர்**
**அரகர என்ன அமரரும் ஆவார்**
**அரகர என்ன அறும்பிறப் பன்றே'.**

கிளிகளும் பூவைகளும் அழகிய சொற்களைக் கொண்ட வேதங்களாலும் திருமுறைகளாலும் நாவரசர் முன்பு துதித்தலும் அவரும் தொழுதார். அருள் நிறைந்த அவருடைய திருமனத்தில் பெருகும் மகிழ்ச்சியும் காதலும் கசியும் அன்பு மாகிய வார்த்தைகளினால் சொற்கள் தடுமாற வெண்ணூல் பூண்டு வேதம் ஓதும் வேதியர்கள் விளங்கும் திருநகரின் எல்லையில் மேற்குத்திசை மணிவாயிலை வந்து சேர்ந்தார்.

துன்பப் பிறவி தீரத் தவத்தைத் தமக்கு முதலாகக் கொண்ட அடியவர்கள் எம் பெருமக னாரை எதிர் கொண்டார்கள். நாவரசர், பெரு வேதங்கள் முதலான பல கல்வித் துறைகளை யும் கரை கண்டவர்களாகவும் யாவரையும் அடிமையாகக் கொண்ட கூத்தப் பெருமானுடைய திருவடி அல்லாது பேணாதவர்களுமான செல்வன் கழல் ஏத்தும் தில்லை வாழ் அந்தணர்கள் நிறைந்த மாளிகைகள் நிலவிய தீருவீதியினை எதிர் கண்டார். அருள் கொண்டார்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்** 620

தளர்ச்சி இல்லாமல், முயற்சியில் குற்றங்குறை இல்லாமல், விடாது முயல்பவர், வெல்வதற்கு அரிய ஊழையும் வென்று விடுவர்.

திருவீதிகள் எங்கும் மணிமாலைகளும் மலர்மாலைகளும் அலங்கரிக்கின்றன. பெருந் தேவர்களுடைய மணிமுடிகள் ஒன்றொடொன்று மோதுவதால் நவரத்தின மணிகள் சிதறிக் கிடக்கின்றன. வாயுதேவன் வாரி எறிந்து திருவலகுப் பணிபுரிகின்றான். வருண தேவன் பன்னீர் கொண்டு பணிபுரிகின்றான். அப்பணிகள் குறைவுள்ளன என்று எவரும் தொழும் மெய்யடி யார்கள் திருவலகிடுவார்கள். மேலே குளிர்ந்த புனலைத் தெளிக்கிறார்கள்.

வானில் வெளியிடங்கள் எங்கும் நிறையும் கொடிகளின் இடையே சூரிய கதிர்கள் நுழைவதற்கரிதாக அலங்கரிக்கப் பெற்ற திருவீதியினை நாயனார் பணிந்தார். வேத ஒலி, கீதஒலி, தோத்திர ஒலி ஒன்றாகி ஒலித்தன வாகீச மாமுனிவர் ஏழுநிலைக் கோபுரத்தை இறைஞ்சி உள்ளே சென்றார்.

வாகீசர் அழகு மிக்க மேகங்கள் சூழ்கின்ற திருமாளிகையை வலம் வந்தார். அது வேகத்தில் எழுகின்ற அன்பாகிய கடல் நிறைந்த திருமேனி முழுவதும் மயிர்க் கூச்செறிந்தது. புளங்காங்கிதம் புல்லரித்தது. பொற் கோபுரத்தி னுள் புகும் அன்பாளர் திருநீலகண்டப் பெருமான் ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தப் பெருமானுடைய பொன்னம்பலத்தைக் கண்களிப்பக் கண்டார்.

அன்பினால் இன்பம் பொருந்த தேடுகின்ற பிரம விட்டுணுக்கள், தேவர்கள் ஏனைய உயிர் களும் அறிதற்கரிய ஆடும் திருவடியினால் புரியும் அமுதத் திருநடனத்தை அமைதி பெற்று நிரம் பாத ஆசையினால் தொழுது ஆர்ந்து உண்டு அனுபவிக்கின்றார்.

நாவரசருடைய கைகள் தலையின் மேல் அஞ்சலியாகப் பொலிகின்றன. கண்கள் கரு மேகம் போல் கண்ணீர் சொரிகின்றன உட்கரணங்கள் உடன் உருகும் அன்பின ஆகின்றன. பயன் பெறும் திருமேனியும் நிலத்தின் மீது விழுமுன்பே எழுகின்றது. மின்னல் போலத் தாழ்ந்த சடையுடன் நின்று ஆடுகின்ற ஐயன் திருநடனத்தைக் கும்பிடும் அப்பரடிகளாருடைய ஆர்வம் பெருகும் நிலை அளவிடற்கு அரியது.

இத்தன்மையராகிப் பலமுறையும் தொழுது எழுந்தார் இன்தமிழிற்கு அன்பராகிய வாகீசர். கூத்தப் பிரானுடைய குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பின் ஊடாக என்று வந்தாய்? என்னும் திருக்குறிப்பின் உட்கருத்தை உணர்ந்து கொண்டார் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரசர்.

அம்பலத்தில் ஆடும் அந்தணரது திருவருள் பெருக்கும் கருணையினால் அருள் பெறும் ஆனந்த அலை உள்ளலைப்ப உணரப் பெற்ற உணர்வினால் திருவருள் குறிப்பு வினாவிற்கு விடை பகருமுகமாக தித்திக்கும் தேன்மொழி மழைபோல அன்பு மழை பொழிந்தார் சொல் வேந்தர்.

**'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ**
**எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ யிகழ வேண்டா**
**முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடு கின்ற**
**அத்தா வுன்னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே.'**

முத்தனே! முதல்வா! தில்லையம்பலத்தாடு கின்ற அத்தா அடியனேன் அன்பு நிறைந்தவ னாகப் பத்தியுடையவனாகப் பாட மாட்டேன்! எதனால் பத்தி செய்வேன்? பத்தி இல்லாதவன் என்று என்னைப் பரிகசிக்க வேண்டாம். பெருமானுடைய திருநடனத்தைச் சேவிக்க வந்தேன், என்று பாமாலைப் பாடி பூமாலையாகச் சாத்தினார்

நாவுக்கரசர் நற்றொண்டாகிய உழவாரப் பணிபுரியும் விருப்பினால் அருள் விடைப் பெற்று தெருள் நிறைந்த சிந்தையராய்ச் செல்வார்.

# எல்லாம் ஈசன் செயல்

திருமுருக கிருபானந்தவாரியார்

முருகப்ப செட்டியார் உப்பு வியாபாரி. சிறந்த சிவ பக்தர். சதா திருஜந்தெழுத்தை ஓதிக் கொண்டே இருப்பார். மாலையில் சிவாலயம் போவார். திருமுறைகளை ஓதுவார். "கைலாச நாதா, கருணைக் கடலே, தேவதேவா, மகாதேவா, நீலகண்டமூர்த்தி, என்னைக் காத்தல் நின்கடன்" என்று துதி செய்வார்.

சந்தைகள் தோறும் மாடுகள்மீது உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டுபோய் விற்பார். அவர் மிகுந்த ஏழையுமன்று, பெரும் பணக்காரரு மன்று. ஏதோ ஒரு சிறு முதலை வைத்து வியாபாரம் புரிந்து அதனால் வரும் வருவாயைக் கொண்டு, தன்னால் முடிந்த மட்டும் தானம், தருமம் புரிந்து கொண்டு, குடும்பத்தை கண்ணிய மாக நடத்தி வந்தார். தன் வீட்டை நாடி வந்தவர்க்கு அன்னமும் நீரும் வழங்கி உபசரிப் பார். நல்ல பண்பும், நட்பும் உடைய அவர் இவ்வாறு இனிது வாழ்ந்தார்.

ஒருநாள் மாடுகளின்மீது உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள சந்தைக்குப் போய் வியாபாரம் செய்தார். அன்று அதிகமாக உப்பு விற்கவில்லை. பாதிதான் விற்பனை நடந்தது. மீதி உள்ள உப்பு மூட்டைகளை மாடுகளின் மீது திரும்பவும் ஏற்றிக் கொண்டு, உடன் உள்ள வியாபாரிகளுடன் புறப்பட்டு தன் ஊருக்கு வந்துகொண்டிருந்தார். வரும்போது சிவபுராணம் பாராயணஞ் செய்து கொண்டே வந்தார்.

திடீர் என்று கருமேகங்கள் எழுந்து கனமழை கொட்டியது. மாடுகள் மீதுள்ள உப்பு மூட்டைக ளெல்லாம் கரைந்துவிட்டன. முருகப்ப செட்டியார் மிக்க வருந்தி, **'சிவபெருமானே! ஏழைபங்காளா! இது என்ன சோதனை ஆண்டவனே! உன்னைச் சதா தியானித்து வழிபடுகின்ற எனக்கு இப்படி நஷ்டத்தைக் கொடுக்கலாமா? ஐயோ நான் என்ன செய்வேன்? கண்ணுதற் கடவுளே! உனக்குக் கருணையில்லையா? பரம கருணாநிதி! இவ்வாறு என்னைத் துன்பத்துக்கு ஆளாக்கலாமா? இது தருமமா? இது முறையா?'** என்று சலித்துக் கொண்டார்.

சிறிது தூரம் வந்தவுடன் நல்ல இருள் சூழ்ந்து கொண்டது. மூன்று கள்வர்கள் புதரில் ஒளிந் திருந்தார்கள். வியாபாரிகள் அங்கு வந்ததும் திடீரென்று புலிபோல் வெளிப்பட்டு, தங்கள் கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து இவர்களைச் சுடுவதற்கு முயன்றார்கள். மழையில் நனைந்து விட்ட படியால் துப்பாக்கி வெடிக்கவில்லை. திருதிரு என்று திருடர்கள் விழித்தார்கள். வியாபாரிகள் ஆறு பேர்களும் துப்பாக்கியை நீட்டியவுடன் உயிர்போய்விட்டது என்று அஞ்சி ஒடுங்கி நின்றார்கள். மழையில் நனைந்து துப்பாக்கி செயல் அற்றவுடன், வியாபாரிகள் திருடர்கள் மீது பாய்ந்தார்கள். கள்ளர்கள் துப்பாக்கியைப் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

வியாபாரிகளுக்கு உயிர் திரும்பியது. முருகப்ப செட்டியார், "தெய்வமே! சற்று முன் உப்பு கரைந்து போனதற்கு உம்மீது சலித்துக் கொண்டேனே. மழையில்லாவிடில் துப்பாக்கிக் குண்டுகள் எம்மீது பாய்ந்து, பொருளும் உயிரும் நீங்கியிருக்கும். உப்புக் கரைந்தாலும் உயிர் கரையாமல் இருந்தது நல்லது" என்று கடவுளைத் துதி செய்தார்.

இம் மழையினால் இரண்டு நாட்கள் ஆற்றில் வெள்ளம் வடியவில்லை. அதனால் வெளியூரி லிருந்து உப்பு வரவில்லை. முருகப்ப செட்டியார் வீட்டில் வைத்திருந்த உப்பு மூட்டைகள் நல்ல லாபத்திற்கு விற்றன. அதனால் நனைந்த உப்பின் நஷ்டம் தேறிவிட்டது. முருகப்ப செட்டியார் எப்போதும் முன்போல் இறைவனைத் துதித்துக் கொண்டும், தானதர்மங்களை நடத்திக்கொண்டும் சுகமாக வாழ்ந்திருந்தார்.

# திருத்தாண்டகம் திருவாசகம் ஓரவதானிப்பு

பேரறிஞர் முருகவேபரமநாதன்

தமிழ் மொழி இலக்கியங்கள் சங்க காலத்தோடு தொடர்புடையன. இதற்குப் பின்வந்த பக்தி இலக்கியங்கள் வரிசையில் காரைக்கால் அம்மையாரின் பதிகம் முன்னோடியாகத் திகழ்கின்றது. யாப்பு அமைவுடன் பண்ணோடு பாடும் அமைபபும் உடையன. இவர் காலத்துக்குப் பின்னால் வந்த மூவர் தமிழும் இசையோடு கூடிய பல திறபபட்ட பாமாலைகளாய்த் திகழ்கின்றன. பக்தி இலக்கியம் பல்லவர் காலத்திலே முக்கியத்துவம் பெறக்காணலாம். திருஞான சம்பந்தர் (கி.பி. 632-648) 384 பதிகம் திருநாவுக்கரசர் (கி.பி. 564-645) 312 பதிகம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் (கி.பி. 694 - 712) 100 பதிகம். மூவர் தமிழே தேவாரம் என வழங்கப்படுகிறது. ஆதியிலே அப்பர் பாடல்களே தேவாரம் என அழைக்கப்பட்டது. மூவர் தேவாரங்கள் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கம் பெற்றன. இவற்றைத் தொடர்ந்து வருவதுதான் திருவாத வூரடிகள் அருளிய திருவாசகம்-திருக்கோவையார். இவை எட்டாந்திருமுறையில் அடங்கும். அடுத்து வரும் ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு. இரண்டுமே இசைப்பாடல்கள்தான். இந்த ஒன்பது திருமுறைகளில் ஆறாந்திருமுறை திருத்தாண்டகம் என்னும் செய்யுள் நடையாம். எட்டாந் திருமுறையிலொன்றான திருவாசகமும் பக்தர்களின் நாவிற் தினம் தவழும் திருமுறையாம். பின் வந்த தாயுமான சுவாமிகள் இப்பாமாலையின் மேதகு சிறப்பைப் பாட்டாகவே வடித்துள்ளார்.

**பன்மாலைத் திரள்இருக்கத் தமையுணர்ந்தோர்<br>
பாமாலைக் கேநீதான் பக்ஷம்என்று<br>
நன்மாலை யாயெடுத்துச் சொன்னார்நல்லோர்<br>
நலம் அறிந்து கல்லாத நானுஞ்சொன்னேன்<br>
சொன்மாலை மாலையாக் கண்ணீர்சோரத்<br>
தொண்டனேன் எந்நாளும் துதித்துநிற்பேன்<br>
என்மாலை அறிந்து இங்கே வாவாஎன்றே<br>
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பிரானே.**

(16 பன்மாலை 1)

பன்மாலைத் திரள் இருக்க - பூமாலைகள் பல இருக்கச் செய்து பக்ஷம் - விருப்பம், நன்மாலை - சிறந்த பாமாலை, என்மாலை அறிந்து-என் விருப்பத்தை உணர்ந்து

நாவழுத்தும் சொல்மலரோ நாள் உதிக்கும் பொன்மலரோ<br>
தேவை உனக்கு இன்னது என்று செப்பாய் பராபரமே!

(பராபரக்கண்ணி 247)

**இதன்பொருள் :** அடியார்கள் தம் நாவினால் வழிபடுகின்ற சொல்மலர்களோ? ஒவ்வொரு தினமும் மலர்கின்ற அழகிய நீர்ப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ, செடிப்பூ ஆகிய நால்வகை மலர்களோ? உனக்கு இன்னவை வேண்டும் என்று சொல்வாய் பராபரமே.

இறை வழிபாட்டிற்குப் பூமாலையும் பாமாலையும் பயன்படுத்தப்பட்டாலும் இந்தத் தமிழ்மாலை என்றும் நிலைத்து நிற்கிறது. இதைத்தான் தமிழ் செய்தல் என்றார் மூவர் பிரான். இறைவனுக்கும் இறைபக்தனுக்கும் இடையிலே ஊடகம் (இடைவெளி) இல்லாமல் பக்தனையும், பகவானையும் ஒன்றித்து நெஞ்சோடு நெஞ்சம் பேசவைப்பன இந்தச் சொன்மாலைகளாம். இவை மனக்கனிவையும், ஐம்புலப் படிமங்களையும் ஏற்படுத்தி ஈற்றில் ஆன்மாவை ஈசனோடு இசைவித்து இரண்டறக் கலக்க வைக்கும் உபாயம் நிறைந்தனவுமாம். இயற்கையான பூமாலைகளை விட்டு செயற்கை மாலைகளை ஆண்டவன் திருமேனியில் அணிவது, அணிவிப்பது நம் பாமரப்பான்மையையும், பக்தியுணர்வையும் நலினப்படுத்துவதுமாம். நம் காலத்தில் வாழ்ந்த விபுலானந்த அடிகளார் இயற்றிய கண்ணிகள் இதன் உட்கோளை உயர்த்திப் பேசுகின்றன.

**வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ<br>
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்எதுவோ?<br>
வெள்ளை நிறப்பூவு மல்ல வேறெந்த மலருமல்ல<br>
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

**காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ<br>
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?<br>
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல<br>
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.**

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ

**வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?**
**பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல**
**நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.**

சடங்குகளையே வளர்க்கும் வழிபாட்டு முறையைச் சுருக்கி இறை நினைப்பையும், ஆத்ம விடுதலையையும் தருவது மட்டுமன்றி உடல் உள்ளுறுப்புகளின் இரத்த அழுத்தம் இல்லாமற் செய்யவும் தியானம் நல்ல மார்க்கம் என மேல் நாட்டினரே அதை நடைமுறைப்படுத்துகின்றனர். இவ்வழிபாட்டமைப்பைத் தாயுமானவர் சொன் மாலையில் வடித்துள்ளார்.

**துள்ளும் அறியாமனது பறிகொடுத் தேன்கர்ம**
**துஷ்டதே வதைகள்இல்லை**
**துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே**
**தொழும்பன்அன்பு அபிஷேகநீர்,**
**உள்உறையில் என்ஆவி நைவேத்தி யம்ப்ராணன்**
**ஓங்குமதி தூபதீபம்**
**ஒருகாலம் அன்றுஇது சதாகால பூஜையா**
**ஒப்புவித் தேன்; கருணைகூர்**
**தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே**
**தெளிந்த தேனேசீனியே**
**திவ்யரசம் யாவும் திரண்டு ஒழுகுபாகே**
**தெவிட்டாத ஆனந்தமே**
**கள்ளன்அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்**
**கலக்கவரு நல்லஉறவே**
**கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு**
**கருணா கரக்கடவுளே**

(கருணா கரக்கடவுள் 8)

துரியநிறை - நிறைவாயுள்ள ஆத்மா, தொழும்பன் - தொண்டன், ஓங்குமதி - நல்லறிவு, துள்ளும் - துள்ளிக்குதிக்கின்ற, மறியாம் மனது - மனமாகிய ஆட்டினை, கர்மதுஷ்டதேவதை - கன்மமாகிய கெட்ட தேவதை, துரியம் நிறை - துரியபதத்தில் நிறைந்த, உள் உறையில் - தேவரீர் என் மனத்திற் தங்கினால், மதி - அறிவு, சதா - எந்நேரமும், மறை - வேதம், தெள்ளி - தெளிவித்து, கள்ளன் அறிஆடும் - கள்ளனாகிய என் அறிவிடத்தும். பக்தி இலக்கிய வடிவங்களைச் சாத்திரம் தோத்திரம் என இரண்டாக வகுத்தனர். தோத்திரத் தொகுப்பில் திருவாசகம் கொடுமுடியாய்த் திகழ்வதற்குச் சமதையாய்ப் போற்றப்படுவது அப்பர் பெருமான் அருளிச் செயலான திருத்தாண்டகம் ஆம் சைவப் பெருநெறியில் திருவாசகம், திருத்தாண்டகம் இரண்டும் மக்களைத் தம்பால் (இரும்பைக் காந்தம் கவர்வது போல) ஈர்ப்பன. இவற்றைப் பாடிப்பாடி மனம்குழைந்து பாகாய் உருகுவதை அனுபவ பூர்வமாக நாம் காண முடிகிறது பல செய்யுள் வடிவங்களை ஆளுடையடிகள் எழுத்தாண்டாலும் தாண்டக வடிவம் இதற்கு முன்னும் இல்லை, பின்னும் இல்லை, இத்திருத்தாண்டகம் ஆறாந்திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. தொண்ணூற்றொன்பது பதிகங்கள் மொத்தம் 981 பாடல்கள் இ∴தோடு திருவாசகம் ஒப்பிடப்பட்டால் அதிலே 51 பதிகங்கள் - 656 பாடல்கள் 3327 அடிகள் சொற்கு உறுதி அப்பர் என்பர்.

ஆடல் வேந்தனைப் பாடல் செய்த நாவேந்தர் தாண்டக வேந்தர், தாண்டக சதுரர் எனவும் அழைக்கப்பட்டார். வாக்யாதிபதி அவர். திருநாவுக்கரசு என இறைவனே அவரை அழைத்தார். இவ்வண்ணமே கூத்தரும் வாதவூரடிகளை மாணிக்க வாசகர் என (தீட்சாநாமம்) அழைத்தார். இனி இருபிரபந்தங்களையும் பற்றிச் சிந்திப்போம்.

அருளாளர்கள் அருளிச் செய்த தோத்திரங்களிலே - இறைவனின் அருளா ணையால்தான் இவை பாடப் பெற்றன. எமது வல்லமையினால் பாடப்பட்டவையன்று எனக் குறிப்பிடுவதைக் காணலாம். இதை மணிவாசகர்

**'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை**
**முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்'**

எனப் பாடியுள்ளார். சிவபுராணம் - 17-20

மணிமொழியார்க்கு முற்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் திரு இலம் பையங் கோட்டூர்த் திருப்பதிகத்தில் இ∴து இறைவன் அருட்பிரகாச ஆணையாலேதான் அருளிச் செய்யப்பட்டன என்பதை அப்பதிகத்தின் 10 பாடல்களிலும் பதிவு செய்துள்ளார்.

**மனமுலா மடியவர்க் கருள்புரிகின்ற**
**வகையலாற் பலிதிரிந்துண் பிலான்மற்றோர்**
**தனமிலான் எனதுரை தனதுரையாகத்**
**தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்**

திருமுறை 1:76:6

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் (சடகோமர்) மனிதனைப்பாடாதீர்கள் என அடித்துப் பேசி நான் பாடுவன எல்லாமே என்னையவன் தன்னாக்கிய தன்மையினாலேதான் எனப் பாசுரங்கள் தோறும் பதித்துள்ளார்

**இன்கவி பாடும் பரம கவிகளால்**
**தன்கவி தான்தன்னைப் பாடுவியாது, இன்று**
**நன்குவந் தென்னுட னாக்கியென் னால்தன்னை**
**வன்கவி பாடுமென் வைகுந்த நாதனே**

திருவாய் மொழி 7:9:6.

வைகுந்த நாதனே என்னைக் கவிபாடச் செய்தவன் என்ற பாவம் பலதிருவாய் மொழிப் பாசுரங்களிலே வரக்காணலாம். ஏனிப்படி யமைந்துள்ளன என்பதைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் வாக்கால் காண்போம்.

**'என் நெஞ்சத்து உள்ளிருந்து**
**இங்கு இருந்தமிழ் நூல் இவைபொழிந்து'**

என்றும் பாடுவதை நோக்கும்பொழுது காழிப் பிள்ளையாரின் நாலாயிரச் சொச்சம் பாடல்களும் நம்மாழ்வாரின் ஆயிரத்துச் சொச்சம் பாடல்களும் (திருவாய் மொழி) இவர்களைக் கருவியாகக் கொண்டு, உயிர்களை உய்விப்பதற்காக இறைவனே பாடினான் என்பதை எளிதாக உணரமுடியும். இந்த மரபு வெகு அரிதாக அப்பர்வாக்கிலும், ஆளுடையடிகள் (மணிவாசகர்) கருத்திலும் வருகின்றமையைக் காணலாம்.

**பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்**
**பாமாலை பாடப் பயில்வித்தானை**
**எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை**
**எம்மானை என்னுள்ளத்துள்ளே யூறும்**
**அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை**
**அண்ணிக்கும் தீங்கரும்பை அரனை ஆதிப்**
**புத்தேனைப் புள்ளிருக்கு வேளூரானைப்**
**போற்றாதே ஆற்றநாள் போக்கினே னே**

திருத்தாண்டகம் 54 - 3

**கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்**
**கதிர்விடுமா மணி பிறங்கு கனகச் சோதிச்**
**சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்**
**சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்**
**பந்தமறுத் தானாக்கிப் பணிகொண் டாங்கே**
**பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித் தென்**
**சிந்தைமயக் கறுத்ததிரு அருளி னானைச்**
**செங்காட்டங் குடியதனிற் கண் டேன்நானே.**

திருமுறை 6: 84, 4.

**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயேன துள்ளப் பிழை பொறுக்கும்**
**பெருமையனைச் சீயேதும் இல்லா தென்**
**செய்பணிகள் கொண்டருளும்**
**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

திருவாசகம் 10:12

திருநாவுக்கரசரும், திருவாதவூரரும் சுந்தரர், சம்பந்தர், அம்மையார், ஆழ்வார்கள் பதித்த முத்திரையான, முத்திரைக்கவிதையென்னும் பலச்சுருதிக்கு முக்கியத்துவம் கொடுத்ததாகக் காணவில்லை. சிவபுராண இறுதியில் மட்டும் அப்படி யொரு கருத்து வந்துள்ளது.

**தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே**
**அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று**
**சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்**
**சொல்லிய பாட்டின், பொருள் உணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்**
**பல்லோரும் ஏத்தப் பணிந்து.**

சிவபுராணம் 90-95

வேறெங்கும் திருவாசகப் பதிகம் பயன் கூறிய தாய் இல்லை. அப்பரடிகளும் பதிகந்தோறும் முத்திரைக்கவிதை (ஈற்றில்) தரவே இல்லை. ஆயினும் கஞ்சிக்குப் பயறு போட்டாற் போலும் வெகு சில பாடல்களில் அந்த இறைவனை வணங்கினால் பயன் உண்டு எனப் பாடியுள்ளார். மாதிரிக்கு ஒரு பாடல் தருதும்.

**தினைத் தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்**
**பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த**
**அனைத் துலகும் ஆளலா மென்று பேசும்**
**ஆங்காரந் தவிர் நெஞ்சே யமரர்க் காக**
**முனைத்து வரு மதில் மூன்றும் பொன்ற**
**அன்று முடுகிய வெஞ்சிலைவளைத்துச் செந்தீமூழ்க**
**நினைத்த பெருங் கருணையன் நெய்த் தான மென்று**
**நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே.**

திருமுறை : 642, 5

பதிகந்தோறும் நாவரசர் ஈற்றிலே இராவணன் கைலையை எடுத்த கதையைப் பாடத்தவற வில்லை, ஆனால் மணிமொழியார்

**தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்**
**ஈரைந்தும் இற்றவா றுந்தீபற**
**இருபதும் இற்றதென் றுந்தீபற**

திருவாசகம் 14 திருவுந்தியார் 19

**இறவாமே வரம் பெற்றே னென்று மிக்க**
**இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி**
**உறவாகி இன்னிசைகேட் டிரங்கி மீண்டே**
**யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை**

(அப்பர்) திருமுறை 6:21:10

இறைவனை அம்மையப்பனாக இருவருமே கண்டு உருகியுள்ளனர்.

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**அன்பினில் விளைந்த ஆரமுதே**

திருவாசகம் பிடித்தபத்து 31-3

**அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ**
**அன்புடைய மாமனும் மாமியும் நீ**

தனித் திருத்தாண்டகம் 95:1

சைவசமயத்தில் பிரணவ மந்திரம் பிரமாணிக்க மானது ஓங்காரத்துட் பொருளை பாடாத சிவக்கவிஞர்களே இல்லை. மணி மொழியார் துவக்கத்திலும் இறுதியிலும் பாடக்காணலாம்.

**உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற**
**மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
**ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணயனே**

சிவபுராணம் 33-35

**உய்யு நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட் பொருளை**
**ஐயன்எனக் கருளிய வா றார் பெறுவார் அச்சோவே**

அச்சோப்பதிகம் 7

பிரணப் பெருமையை அப்பர் வாக்கிற் கேட்போம்
**ஒரு சுடரா யுலகேழு மானான் கண்டாய்**
**ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்**

திருமுறை 6.39.10

அகரம் உகரம் மகரம் நாதம் விந்து ஐந்தும் கொண்டது ஓங்காரம்,

சிவபெருமானின் மகேசுவரமூர்த்தங்கள் இருபத் தைந்து. அவற்றிலொருதிருமேனி அர்த்த நாரிஸ்வர வடிவம். உலகமே வியக்கும் அதியற் புதமான நிலை கல்லிலே செதுக்கியுள்ளனர். சிற்பியின் கைவண்ணத்தைத் தமிழகக் கோயில் களிலே காணலாம். உலோகத்திலும் படிமங்கள் வார்க்கப்பட்டுள்ளன. ஏன் ஓவியத்திலும் தீட்டி யுள்ளனர் சைத்திரிகர்கள். சொல்லிலே கலை வண்ணம் கண்டவன் தமிழன். இந்தப்பாதித் திருவுருவைப் போட்டோ மாதிரி சொல் வண்ணத் திற் தீட்டியிருக்கிறார்கள் இவ்விருவரும்.

**புது விரி பொன்செ யோலை யொருகாதொர் காது**
**சுரிசங்க நின்றுபுரள**
**விதிவிதி வேத கீதமொருபாடு மோத**
**ஒருபாடு மெல்ல நகுமால்**
**மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்**
**குழல்பாக மாக வருவர்**
**இது இவர் வண்ண வண்ண மிவள்வண்ண வண்ண**
**மெழில் வண்ண வண்ண இயல்பே.**

- அப்பர்

ஒவ்வொரு அடியிலும் பாதிசிவன் பாதி சிவை யாகத்தீட்டிய பெருமை நாவேந்தர்க் கேதனிச் சொந்தமானது. இதற்குச் சழைக்காமல் சொற் சொட்டாகப் பாடுகின்றார் திருவாசக செம்மல் வாதவூரர்.

**தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்**
**பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்**
**சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்**
**கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய் கோத்தும் பீ**

திருவாசகம் கோத்தும்பி 18

இவ்வண்ணம் ஆளுடையரசு, ஆளுடையடிகள் இருவரதும் பைந்தமிழ்ப் பாமாலையை ஒப்பீட் டாய்வு செய்யும்போது மேலும் பல உண்மைகள் வெளிப்படும். அவற்றிலொன்று மந்திரங்களாய்த் திகழும் போற்றி போற்றியென வரும் பாமாலை கள். திருவாசகத்திலே அமைந்த நெடும் பாடல் களில் ஒன்று போற்றித் திருஅகவல், மற்றொன்று திருச்சதகத்திலமைந்த ஏழாம் பதிகம். காருண்யத் திரங்கல். திருநெடுந்தாண்டகத்திலும் போற்றித் திருத்தாண்டகம் அர்ச்சனை மாலை போல அமைந்தது.

**தோழா போற்றி துணைவா போற்றி**
**வாழ்வே போற்றி வைப்பே போற்றி**
**முத்தா போற்றி முதல்வா போற்றி**
**அத்தா போற்றி அரனே போற்றி**
**உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி**

போற்றித்திரு அகவல்

**போற்றியோ நமச்சிவாய புயங்கனே**
**மயங்குகின்றேன்**
**போற்றியோ நமச்சிவாய புகலிடம்**
**பிறி தொன்றில்லை**
**போற்றியோ நமச்சிவாய புறமெனைப்**
**போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சிவாய சயசய**
**போற்றி போற்றி**

காருண்யத்திரங்கல்

**வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி**
**மீளாமே ஆளென்னைக் கண்டாய் போற்றி**
**ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி**
**ஓவாத சத்தத் தொலியே போற்றி**
**ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி**
**ஆறங்க நால் வேத மானாய் போற்றி**
**காற்றாகி யெங்கும் கலந்தாய்போற்றி**
**கயிலை மலையானே போற்றி போற்றி**

போற்றித்திருத்தாண்டகம்

வேதசாரமாய் அமைந்த திருமுறையே நம்தமிழ் மறையாம். இதன் மேன்மையை அப்பர் தேவாரத்துடனும் மணிவாசகர் திருவாசகத் துடனும் ஒப்பீடு செய்து இரண்டின் விழுமியங் களும் இங்கே பேசப்பட்டன. சைவசமயிகளாய நாம் தெருப் பாட்டைவிட்டு அருளாளர்களின் தேவார திருவாசகங்களைப் போற்றுவோமாக.

# நாவலரே மீண்டும் வருக

## சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக

திருமதி. தி. இந்திரா

சென்ற இதழின் தொடர்ச்சி..................

சைவமும் தமிழும் இரண்டு கண்கள் எனப் போற்றி வளர்த்துச் சென்ற தாங்கள் மீண்டும் திரும்பி வந்தால், தமிழினத்துக்கு நேர்ந்த துர்அனர்த்தினால் தமிழினம் எதிர்நோக்கும் இன்னல்களை, தமிழ் சைவம் இரண்டிற்கும் நேர்ந்த நிலையை அறிந்து வேதனை அடைவீர்கள். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவு ஈடேறியதை எண்ணி பூரிப்படையத்தான் வேண்டும். இருந்தாலும் நம் தாய் மொழி படும் அவலத்தை, கொச்சைத் தமிழை, எமது பிள்ளைக்குத் தமிழ் பேச, எழுத வராது என்று கவலை கொள்ளும் தமிழினத்தை, அதே வேளை அதைப்பெருமையாக எண்ணி மகிழும் ஒரு சில தமிழ்ப் பெற்றோரின் பரிதாப நிலையை, தாய் மொழியை எப்படியாவது தம் சந்ததியினருக்கு ஊட்டிவிட வேண்டுமென்று மேற்கொள்ளும் பெற்றோரின் பகீரதப் பிரயத்தனங்களை அறிய நேரிடும் போது இந்நிலையிலா எமது தமிழ் உள்ளது என்று வினவும் நிலைக்கு ஆளாவீர்கள். இந்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் எமது தமிழினம் தமிழின் சுவையை, இறையுணர்வை, இலக்கிய ரசனையை எங்ஙனம் அனுபவிப்பது?

இறையுணர்வு என்னும்போது, ஆதியந்தமில்லாத அரும் பெரும் சோதியை நாம் பாடித்துதிக்க, நைந்து நைந்து உருகி இறைவனை நாட, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய திருவாசக, தேவாரங்களை தேனினும் இனிய செந்தமிழில் அருளியிருக்கிறார்கள் எமது நாயன்மார்கள். அவர்களின் அரும் பெரும் பாடல்களை அவர்கள் பாடிய மொழியில் போற்றிப் பாடினால் தான் பக்தியும், உள்ளம் நெகிழும் நிலையும் ஏற்படும் என்பதை நாம் அறிவோம். ஆனால் தமிழ் தெரியாது வளர்ந்த ஒருவர் தான் பேசும் மொழியில் எங்ஙனம் இறைவனைத் துதிப்பது? எந்தப்பாடலைப் பாடி இறைவனைப் போற்றுவது? வேறு மொழியில் இறைவனை இவ்வாறு பாடியிருக்கிறார்களா? அப்படியாயின் அந்த மொழிக்குரிய தெய்வத் தைத்தான் அவர் நாட வேண்டுமா? அப்படியாயின் அது சைவமாகாதே! தான் பிற்பற்றும் மொழியில் மொழிபெயர்ப்பு செய்தும் பாடலாம் தானே என்றும் கூறலாம். அதுவும் தவறு. அவ்வாறு மொழிபெயர்த்துக் கருத்து விளங்கி அதே உருக்கத்தில் பாடினாலும் பாடல்கள் அமைந்த மொழியில் பாடி அதனால் ஏற்படும் பேரானந் தத்தை உள்ளம் கசிந்து உருகும் நிலையை ஒருபோதும் பெற முடியாது. அனைத் தெலும்புள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானை அதே மொழியில் தான் பாடி, அதனால் எற்படும் பரவச உணர்வை, காதலாகிக் கண்ணீர் கசிந்துருகும் நிலையைப் பெறமுடியும்.

இதோ சில பாடல்களைப் பார்ப்போம்.

**'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன்**
**விரையார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி**
**வெதும்பியுள்ளம் ........'**

மாணிக்கவாசகரின் இந்த உள்ளமுருக்கும் அடிகளை எப்படி அனுபவிக்க முடியும் அந்நிய மொழியில்?

**'பாட வேண்டும்நான் போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்**
**காட வேண்டும்நான் போற்றி அம்பலத்**
**தாடு நின்கழற் போது நாயினேன்**
**கூட வேண்டும்நான் போற்றி ......'**

தேனுக்குள் கருப்பஞ் சாற்றைக் கலந்து தித்திக்க வைக்கும் இதன் அற்புதச் சுவையை, நைந்துருகும் நிலையை எவ்வாறு அந்நிய மொழியில், இனிய தழிழைத் தெரியாத ஒருவரால் பாடி உணர முடியும்.

**'முத்தனே முதல்வா முக்கணா முனிவா**
**மொட்டறா மலர்பறித் திறைஞ்சி**

**பக்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்**
**பரகதி கொடுத்தருள் செய்யுஞ்**
**சித்தனே.................'**

படிக்கப் படிக்கத் தெவிட்டாத மணிவாசகரின் மணிமணியான இனிய அடிகளை, இன்னும் பார்ப்போம்:

**'...கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்**
**போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று.....**

**...ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை**
**பெருமானே**
**கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்**
**தங்கருத்தின்**
**நோக்கரிய நோக்கே நுணுக்கரிய**
**நுண்ணுணர்வே**
**போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே**
**காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே**
**ஆற்றின்ப வெள்ளமே....**

**...தேற்றனே தேற்றத் தெளிவேயென்**
**சிந்தனையுள்**
**ஊற்றான உண்ணா ரமுதே உடையானே......'**

இவ் வடிகளை நோக்கும்போது திருவாசகத்துக்கு இனிய தமிழால் பெருமை சேர்ந்ததா, திருவாச கத்தால் இனிய தமிழ் பெருமை பெற்றதா என்று கூறமுடியாத அளவிற்கு சைவமும் தமிழும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள் ளதைக் காணலாம்.

கருத்து விளங்கிப் படிப்பவரையும், இனிய குரலில் பாடுவதைக் கேட்பவரையும் இறைவன் பால் இலகுவில் ஈர்க்கச் செய்யும் தன்மை திருவாசகத்துக்கேயுரிய தனிச் சிறப்பு. "திருவாச கத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற வரிகளை நோக்கின் இக்கூற்று உண்மை என்பது புலனாகும். இத்தகைய திருவாசகத்தின் பெருமையை தழிழ்த் தெரியாது வளர்ந்த ஒருவரால் எப்படி உணர முடியும்?

கல்லையும் கனிய வைக்கும் இவ் வடிகளைப் பார்ப்போம்.

**உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்**
**பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும்**
**இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன்**
**குரை கழற்கே**
**கற்றாவின் மனம் போலக் கசிந்துருக**
**வேண்டுவனே.**

படிக்கப் படிக்க உணர்ச்சி ததும்ப வைக்கும் தமிழ் முத்துக்களாலமைந்த இவ்வாசகங்கள், மணிவாசகர் மூலம் இறைவனால் நமக்குக் கிடைத்த மாபெரும் சொத்து என்பதில் சைவ சமயத்தவராகிய நாம் பெருமை கொள்ள வேண்டும்.

திருநாவுக்கரசு சுவாமிகளின் பக்தி மேலீட்டி னால் உள்ளம் உருகி வெளி வந்த இனிய புராணம் இது.

**'இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்**
**வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்**
**உன்னைஎன்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்**
**மகிழ்ந்துபாடி**
**அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ்**
**இருக்க என்றார்.'**

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலத்தித்திக்க வைக்கும் இனிய தமிழ்ப் பக்திப் பாமாலைகளை நாம் வேறு எந்த மொழியில் பெறமுடியும்? இதேவேளை 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற புரட்சிக் கவிஞரின் வரியினையும் நினைவிற் கொள்ளல் சாலச் சிறந்தது.

திருக்கடவூர் வீரட்டானத்தாரைத் திருநாவுக் கரசு சுவாமிகள் இனிய தமிழில் பின்வருமாறு துதிக்கின்றார்.

**பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி**
**அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை**
**உள்ளே வைத்து**
**விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல்**
**லார்க்குக்**
**கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே.**

இன்னோர் பாடலில் சொல்லழகு, பொருளழகையும் விஞ்சி நிற்பதைக் காணலாம்.

**அஞ்சனை கணையி னானை யழலுற அன்று நோக்கி**
**அஞ்சனை குழலி னாளை யமுதமா வணைந்து நக்கு**
**அஞ்சனை யஞ்சு மாடி யாடர வாட்டு வார்தாம்**
**அஞ்சனை வேலி யாரு ராதரித் திடங்கொண் டாரே.**

இவ்வாறாக இனிய தமிழுடன் விளையாடி இறைவனுடன் நெருங்கி உறவாடியிருக்கிறார்கள் நமது அருளாளர்கள். இந்த வகையில் எமது சமயத்துடன் பின்னிப்பிணைந்த தமிழின் சுவையைத் தமிழ் பேச வராத இளம் சமுதாயத்தினரால் பெற முடியுமா? இதனால் அவர்களுக்குக் கிடைக்க இருக்கும் ஆன்மிக உணர்வும், சைவப் பற்றும், தமிழின் சுவையை அறியும் வாய்ப்பும் அற்றுப்போகும் நிலைதான் உருவாகும். தமிழன் என்று சொல்லிக் கொண்டு தமிழ் தெரியாதும், சைவன் என்று கூறிக் கொண்டு சைவத்தின் மேன்மை தெரியாதும் குழம்பும் தமிழினத்தின் இக்கட்டான நிலையைத் தடுத்து நிறுத்தி, எதிர்காலச் சந்ததியினரிடையே எமது சமயத்தை வளர்க்கவும் ஆன்மீக அறிவை ஊட்டவும், இனியதமிழ் சிதைந்து விடாமல் காக்கவும், சைவப்பண்பாடு புத்தெழில் பெறவும் மீண்டும் தாங்கள் வரவேண்டும் ஐயா!

“பெறுதற்கரிய மானிடப்பிறவி எடுத்ததே ஆறறிவு கொண்ட நாம் பிறப்பின் நோக்கத்தை அறிந்து, விளங்கி பிறவிப்பிணியை நீக்கிப் பிறவியிலாப் பேரின்ப வாழ்வு பெற்று இறைவனின் திருவடி நீழலில் நிலையான இன்பத்தைப் பெறுவதற்காகத்தான்” என்று தாங்கள் வளர்த்த சைவம் கூறுகின்றது.

இந்தமானிடப்பிறவியை எவ்வாறு வாழ வேண்டு மென்பதை வள்ளுவப் பெருந்தகையும் தனது குறள்களில் நமக்குத் தந்து பேருதவி புரிந்துள்ளார். அந்தமகானின் ஒரு சில குறள்களைப் பார்ப்போம்

**‘தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**

**மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்’**

போன்ற குறள்களின் மூலம் நாம் வாழும் வழி முறைகளை அழகாக, கருத்துச் செறிந்தவையாக எமக்குக் கிடைக்கச் செய்துள்ளார். இதேபோன்று கடவுள் வாழ்த்து, இனியவை கூறல், ஒழுக்கம் உடைமை, அன்பு உடைமை, பொறையுடைமை, நடுவுநிலைமை, இல் வாழ்க்கை போன்ற வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் அனைத்து விடையங்களையும் தன்னகத்தே அடக்கி ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறள்களாக அமைந்த வள்ளுவனின் மகா வாக்கியங்கள் எம்மை நல்ல முறையில் வாழவைப்தற்குச் சிறந்த ஔடதமாக விளங்குகின்றன.

இதைவிடப் பேறென்ன வேண்டும் எமக்கு. இனிய தமிழில் அனைத்து மதத்தினருக்கும் பயன்படக்கூடிய முறையிலமைந்த வள்ளுவரின் வாய்மொழியைக் கடைப்பிடித்தும் தத்தம் சமயத்தின் நெறி வழுவாதும் நின்றிருந்தால் இவ்வுலகு பூ - உலகாகவே இருந்திருக்கும். கிடைத்தற்கரிய இவ்வரிய பொக்கிஷத்தைப் படித்துவிட்டு ஒரு பக்கத்தில் போட்டுவிட்டும், அதைத் தெரிந்து கொள்ளாமலும், சமய நெறியில் நின்று வழுவி மனம்போன போக்கில் வாழ்வதாலும் தானே எமக்கு இந்த அவலநிலை.

எனவே சமயம், சமயப்பண்பாடு தமிழ் அறிவு என்பவற்றை வளர்க்க பாடசாலைகளில் சமய அறிவுடன் திருக்குறளறிவையும் கூடவே ஊட்டி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க ஆவன செய்தல் சாலச்சிறந்தது அல்லவா?

நாவலரே! ‘நீர் பிறந்திலரேல் இனிய தமிழெங்கே! உயிரினும் மேலாய சைவம் எங்கே’ என்று எண்ணினோம். அதேபோல் இன்றும் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, இருள் மேகங்களால் சூழப்பட்ட வானம் போல் எமது சைவத்தை மூடிக்கிடக்கும் அறியாமை நிலையை அகற்றி புத்துயிரளிக்க, மீண்டும் எம்மிடையே வந்தருள வேண்டும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

# ஆறுமுக நாவலரின் சைவ மறுமலர்ச்சிப்பணி

சென்ற இதழின் தொடர்ச்சி.......

- சித்தாந்தரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம் -

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற சொற்கள் சித்தாந்தத் துறையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியிலுள்ள மூன்று நிலைகளாக இவை கருதப்படுகின்றன. சத்திநிபாதம் என்பதற்கு (ஆன்மாவில்) சத்தி இறங்கல் அல்லது சத்தியின் வீழ்ச்சியென்றே பலரும் பொருள் கொள்வது மரபு. நாவலர் இதனைப் பின்வருமாறு விளக்குவார்.

*"சத்திநிபாதமாவது ஆன்மாவானது ஞானத்தை தடுக்கும் ஆணவமல சத்தி நழுவும் அவசரத்திலே முற்பிற் பாடறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக்கிரியை விளக்குவதாம்".*
(மறைஞானசம்பந்தர் 'சைவசமய நெறியும் ஆறுமுகநாவலர் உரையும்')

*"சத்தி நிபாதமாவது திரோதான சத்தி நீங்க அனுக்கிரக சத்தி பதிதலாம்"* -
(நாவலர் பெரிய புராண சூசனம்)

அத்துவிதம் என்ற இறை உயிர் சேர்க்கையைக் குறிக்கும் சொல்லுக்கு சங்கரர், இராமானுஜர் போன்றோர் தம் கொள்கைகளை விளக்குவதற்கு ஏற்ற வகையில் பொருள் காண்பர். இதனால் ஏற்பட்ட குழப்பம் நிலவிய காலத்தில் மெய்கண்டாரும் அவர் பின் வந்த ஞானிகளும் தமிழக சிந்தனைகளையும் கருத்திற் கொண்டு சித்தாந்த அடிப்படையிலே பொருள் கண்டனர். ஆயினும் சைவ உலகு இன்னமும் இதில் தெளிவில்லாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. நாவலர் காலத்தில் இதனை விளக்கிக் கூறுபவர் அரிதாக இருந்தனர். சைவ சித்தாந்தத்தில் இதனைச் *சுத்தாத்துவிதம்* என்பர். நாவலர் வழிவந்த காசிவாசி செந்தி நாதையர் சித்தாந்த சைவத்தை *வைத்திக சுத்தாத்துவித சித்தாந்த சைவம்* எனக் குறிப்பிடுவதுண்டு நாவலர் அத்துவிதம் பற்றிப் பின்வருமாறு கூறுவார்.

*"அத்துவிதமாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றல். பிரமமும் ஆன்மாவும் எனப்பொருள் இரண்டில்லை, ஒன்றே, எனக் கூறுவர் மாயாவாதிகள் சிவமும் ஆன்மாவும் வேறு பொருளெனவும் அவ்விரு பொருளே இரண்டென வேறுபடாது அதுவிதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமெனவுங் கூறுவர் சைவ சித்தாந்திகள். அத்துவித மென்னுஞ் சொற்கு இரண்டின்மை எனப் பொருள் கொள்வர். மாயாவாதிகள். இரண்டன்மை எனப் பொருள் கொள்வர். சைவ சித்தாந்திகள்".*
(மறைஞானசம்பந்தர் "சைவ நெறியும் ஆறுமுக நாவலர் உரையும்")

சைவத்திலே குருவிற்கும் சிவனடியாருக்கும் சிறப்பான இடமுண்டு. குருவாகவோ சிவனடியாராகவோ எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அதற்கு அருகதை யற்றவர்களாகவோ அல்லது பாவம் செய்பவராகவோ பின்னர் தெரிய வந்தால் என் செய்வது என்பது சைவ நோக்கில் ஒரு நடைமுறைப் பிரச்சனை. அதற்கு நாவலர் கூறும் பதில், " தானே பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியினாலே பழுதுபடின், அதனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறுஒரு சிவலிங்கத்தைக் கைக்கொள்வது போல, அவனை இகழாது கைவிட்டு வேறொராசிரியனை அடைந்து வழிபடல் வேண்டுமென்பதே"
(சைவ வினாவிடை 2ம் புத்தகம்)

## நாவலரின் பெரியபுராண சூசனம்

நாவலர் தமது பெரியபுராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம் பதிப்புக்கு எழுதிய உபோற்காதமும் சூசனங்களும் சித்தாந்த தத்துவங்களையும் ஆகம நெறிகளையும் விளக்குகின்றன. பெரிய புராணத்தை பகுதி பகுதியாகப் பிரித்து அவற்றின் உள்ளுறையாக ஒவ்வொரு சூசனம் எழுதியுள்ளார். புராணக் கதைகள் மூலம் பெரிய புராணத்துக்கு விளக்கமளிப்பதுடன் சிந்தாந்தக் கருத்துக்களை, சிவபுண்ணியம் முதலியவை செய்ய வேண்டியவை , விலக்க வேண்டியவை ஆகியவை இவற்றில் கூறப்பட்டுள்ளன. வடமொழி நூல்களில் உள்ள சித்தாந்தத்துக்கு முரண்படாத பல கருத்துக்களும் தமிழிலுள்ள சித்தாந்த நூற் கருத்துக்களும் திரு அருட்பாக்களும் இவற்றிற்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆகமம் என்ற சொல்லிற்குப் பலரும் பலவாறு பொருள் கொள்வர். "ஆ என்பது சிவஞானம், க என்பது மோஷம், ம என்பது மலநாசம், ஆதலால் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோஷத்தைக் கொடுத்தல் பற்றி ஆகமம் எனப் பெயராயிற்றென்று கூறுதலும் ஒன்று " என்று நாவலர் எழுதுகிறார். ஆயினும் அச்சொல்லுக்குப் பொருத்தமான பொருள் எது என்பதையும் பின்வருமாறு தமது சூசனத்தில் எழுதுகிறார்.

*"ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள் படுதலால், ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த லஷனத்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்த பொருளென்க".*

சைவ ஆகமத்தின் அடித்தளத்தில் அமைந்ததே நாவலரின் சைவநோக்கு எனலாம். வேதமே எல்லாவற்றிற்கும் பிரமாணம் என்ற கருத்தில் அவருக்குச் சிறிதும் உடன்பாடில்லை.

எந்த சமயத்தைப் பின்பற்றி நின்றாலும் அதில் வழிபடு தொய்வமாக மாதொரு பாகனரே வந்து அருள் புரிவர் என்பது சித்தாந்த கருத்து. பல சமயங்களிலே நின்றும், பல நெறிகளைப் பின்பற்றியும், சுவர்க்கத்திலே போகம் துய்த்தும், இறுதியில் பூமியிலே வந்து பிறந்து சைவநெறிகளைக் கடைப்பிடித்தே உய்வர். என்ற கருத்தை தான் எழுதிய உபோற்காதத்தில் விளக்குகிறார். இங்ஙனம் விளக்கிப் பின்வருமாறு தொடருகிறார்:

*"இதுகாறும் கூறிய வற்றால் சைவசித்தாந்தத் தேயன்றி பரமுத்தி சித்தியாதென்பதும், அப் பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச்சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே யென்பதும், வேதத்துள் விதித்த வேள்வி முதலியனவெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரையேன்றி, தீவினை போல அது நிகழவொட்டாது தடை செய்து நிற்றலும் உடையனவேயாம்.*

இக்கருத்தைத் தனது சைவ வினாவிடை 2ஆம் புத்தகத்திலும் எளிமையாக விளக்கியுள்ளார். மேற்கூறியவற்றிலிருந்து நாவலர் சித்தாந்தத்துக்கு மேலான இடம் கொடுத்தாரென்பதும், வேதத்தில் கூறப்பட்ட பல கருத்துக்கள் சைவத்திற்குப் பொருந்தாதவை என்பதும் பெறப்படும். இதனை அவரின் சைவ வினாவிடைப் புத்தகங்களில் தேவார திருவாசக நூல்களுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்திலுருந்தும் உணரலாம்.

சைவர்களுக்கு சிதம்பரம் சமய முக்கியத்துவம் மிக்கது. பூ என்றால் தாமரை யென்றும்

கோயில் என்றால் அது சிதம்பரமே என்றும் கூறுவார்கள். பெரிய புராணத்து தில்லை வாழந்தணர் சருக்கத்துக்கு நாவலர் எழுதிய சூசனத்தில் சிதம்பர மகிமை, தில்லைவாழ் அந்தணர்களது மகிமை, வேதவுணர்ச்சி, சைவாகமவுணர்ச்சி என்று நான்கு பகுதிகளுண்டு.

சாந்தோக்கியோபநிடதம், கைவல்லியோப நிடதம், முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டி, அவை குறிக்கும் தகர வித்தையையும், அதனை உபாசிக்கும் முறையையும் விளக்கி, சிதம்பரம் பூதாகாசம்போல் சடமாகாது, அது சித்தென்று நிறுவுகிறார். வடமொழி தமிழ் மொழியிலுள்ள பல நூல்களை ஆதாரமாகக் கொண்டு, சிவன் ஆனந்த நடமிடும் இடம் உடம்பிலே இடைக்கும் பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனை என்றும் கூறுவதும், பரமாண்டத்திலே இலங்கைக்கும் இமய மலைக்கும் இடையிலுள்ள சிதம்பரமென்று ஒப்பு நோக்குவதும், சிவனின் திருநடனம் பஞ்சகிருத்தியம் என்று விளக்குவதும் அவரின் பரந்த அறிவுக்கு எடுத்துக்காட்டு,

சுந்தரமூர்த்தி நாயனார், தமது திருத் தொண்ட தொகையில் "தில்லைவாழந்தணர்" என்று தொடங்கி அவர்களுக்கு முக்கியம் கொடுக்கிறார். இன்றைய சிதம்பரத்துத் தீட்சிதரை கருத்திற் கொண்ட சிலர் இது பொருத்தமானதில்லை என்று கருதுவதுண்டு. "திருஞானசம்பந்த நாயனார், அன்றிருந்த தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் தமக்குச் சிவகணத்தராய்த் தோன்றக்கண்டு, அத்தன்மையைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்குக் காட்டினார், என்று திருமூலநாயனார் புராணத்தில் சொல்லப்பட்டது." இப்படித் தனது சூசனத்தில் எழுதி அத்தில்லை வாழ் அந்தணரின் சீலத்தையும் வேதாகவுணர்ச்சியையும் விதந்து கூறுகிறார். இதனைப் படிப்பவர் மனதில் அன்றிருந்த தில்லைவாழந்தணர் போற்றப்பட வேண்டியவரென்ற உணர்வு இயல்பாகவே எழும்.

தனது சூசனங்கள் மூலம் சித்தாந்த விளக்கங்கள் கொடுக்கும் நாவலர், சைவமே உயர்ந்த சமயமென்பதைப் பல இடங்களில் நிலை நாட்டுகின்றார். காமிக ஆகமத்தில் வரும் ஒரு பகுதியை எடுத்துக் காட்டி இதனை நிறுவுவதை ஒரு உதாரணமாக கொள்ளலாம்.

*"சைவமே வைதீகம் எனப்படும், வைத்திகமே சைவம் எனவும் படும்.சைவமானது வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதிகமும் சைவத்திற்றாழ்ந்தது. அற்றாயினும், சைவம் வேதப் பொருளோடு ஒற்றுமையாய் இருந்தால் வைதிகம் என்றும் வேதாசாரம் என்றும் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானம் பரஞானம், பசுபாச பதார்த்த போதமாகிய வேதம் முதலியன அபரஞானமாம்".*

இங்ஙனம் அவர் எழுதிய பல சூசனங்களும் சித்தாந்த சைவத்தின் உட்பொருளை விரிவாக விளக்கி, சைவத்திற்கு அரண் செய்கின்றன.

**சிவத்தை மறவாச் சிந்தனை**

அன்றிருந்த நிலையை மாற்ற, மக்களின் தேவைக்கேற்ற வகையிலே கல்வி, சமுதாய முன்னேற்றம், இலக்கணம், இலக்கியம், நூற்பதிப்பு, சைவம், சித்தாந்தம், ஒழுக்கம், என்று பலதுறைகளில் பணிபுரிந்து பல மாற்றங்களை ஏற்படுத்தினவர் நாவலர். இவையெல்லாம் சைவம் வாழவும் வளரவும் வேண்டிச் செய்த மறுமலர்ச்சிப் பணிகளே.

அவர்பிறந்த ஈழத்திலும் பார்க்க அவரைக் கூடுதலாக மதித்துக் கௌரவித்தது தமிழ் நாடே. ஆதீனங்களும் தனிப்பட்டவர்களும் இவர் பிரசங்கங்களைக் கேட்டும், நூல்கள் பரிசோதித்து வெளியிடச் செய்தும் பயனடைந்த னர். பல்லக்கில் சுமந்து அவரைப் பாராட்டி யதுமுண்டு. 'நாவலர்' என்ற பட்டத்தை

அளித்துக் கௌரவித்தது தமிழ் நாட்டிலுள்ள திருக்கைலாய பரம்பரையில் வந்த திருவாவடுதுறை ஆதீனம்.

பிற சமயத்தவர் கொடுத்த இடர்களும், சைவ சமயத்தவர் சிலர் தந்த அவமரியாதையான செயல்களும் அவரை மனம் நோக வைத்தன. இதனை, அவர் யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆடிமாதம் 1979 ம் ஆண்டில் நடந்த சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசையில் செய்த பிரசங்கத்திலிருந்து அறியலாம்.

ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே ஒரு சைவப் பிரசாரரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போல் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அனேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டு கைமாறு கருதாது சமயத்தை போதிக்க என்னைப்போல் எவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம். (த.லைாசப்பிள்ளை, நாவலர் சரித்திரம்)

அவர் கூறியது போல் இதுவே அவரின் கடைசிப் பிரசங்கமாக இருந்தது. மறுநாள், அன்பரொருவர் "ஏன் இப்படிக் கடைசிப் பிரசங்கம் என்று கூறினீர்கள்?" என்று கேட்டதற்கு, 'தமக்கு அந்நேரம் ஒன்றும் தெரியவில்லை' என்று பதிலளித்தார்.

இந்தப் பிரசங்கம் செய்து மூன்று மாதங்களின் பின் அவர் சிவபதமடைந்தார். அப்பொழுது கூட அவர் சிவநெறி வழுவாத செம்மை யாளராகவே உயிர் நீத்தார். பூக்களைக் கைநிறைய எடுத்து, தமது சிரசிலே போட்டுக் கொண்டு, அஞ்சலி செய்து, பின் சயனத்தில் படுத்து, அறிவில் சற்றேனும் பேதமில்லாமல், தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படி கேட்டுக் கொண்டு, அவைகள் ஓதப்படும் பொழுது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலியதலங்களின் விபூதியணிந்து, உருத் திராஷம் பூண்டு, கங்கா தீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின் மேல் வைத்து சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தை வைத்து அவனின் திருவடி நிழலை அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 56, மாதம் 11 நாள் 01.

சைவ சமயத்தவர் எப்படி வாழவேண்டுமென எண்ணினாரோ, அப்படியே வாழ்ந்து காட்டியவர் ஆறுமுக நாவலர். சைவநெறியில் அணுவளவும் தவறாமல் நின்று, விபூதி உருத்திராட்சம் ஆகிய சிவ சிந்தனைகளைத் தரித்து, சிவனை மறவாச் சிந்தையுடன் சிவப்பணி புரிந்தவர் அவர். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாழ்வுடன் ஒப்பிடத்தக்கது நாவலரின் வாழ்வு.

சென்னைப் பட்டணத்து உயர்நீதி மன்ற நீதிபதியாக (High Court Judge) ப் பணிபுரிந்த தி. சதாசிவ ஐயர் 1913 ல் சிதம்பரம் சைவப் பிரகாசவித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவின் போது பேசிய வார்த்தைகள் நாவலரை அறிய உதவுவன.

*"நாவலரைப்போல் முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்கள் இல்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப் போலத் தமிழ்ப் பாஷையையும் நல்லொழுக்கத்தையும் சைவ சமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உபசாரஞ் செய்தவர் வேறொருவருமில்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல ஒருவருமில்லை"*
(த. கைலாசப்பிள்ளை, 'நாவலர் சரித்திரம்'.)

Continued from January issue............

# THE RISE OF ASURAS

*V. Sivarajasingham*

Mounting his vehicle the buffolo he reached the temple of Manikarnika when Markandeya was immensed in penance and prayer. Presenting himself before the youth in most fearful form dark complexion unruffled red hair, the canine teeth projecting like tusks and eye burning like carbuncles and twisting and twirling the trident in his left hand and holding the swoop-strings on the right, he thundered, 'Urchin as you are, you may be ignorant of the gravity of my job. I am empowered to take the life of all humans on the expiry of the term of existence. None can therefore prevent me from performing my task. Even the Trinity of God's will not interfere in my duty bound activity". So saying, and imagining that the youth would not be coerced into submission, he threw the strings in his hand round Markandeya and pulled him towards him. Markandeya held steadfastly the image of Shiva while his mouth uttered prayers of surrender. Unsuccessful in his attempt Yama fell aside like a cloud pushed by the foot of Lord Shiva who appeared through the Image.

While Markandeya stood enthralled and engulfed in surprise, Lord Shiva spoke thus: "With your immaculate penance and endless devotion you have proved to be a selfless adherent. As a reward for your incomparable penance and devotion I give you ageless life".

The story of Markandeya illustrates the greatness of penane with which he was able to surpass fate and triumph over the inconceivable Yama. There is nothing unattainable for a man endowed with the strength of penance. Therefore my dear children, engage yourself in penance with the ultimate aim of achieving godhead. Thus concluded Kasipa his sermon to his sons.

## iii. Maya's Advice

As the sage closed his speech Mayadevi laughed gently and said, "Well, learned sage that was indeed a fine piece of moral discourse. It is indeed an ideal advice o people of your calibre who are angelical and unwordly, and who are bent on attaining salvation. Our children are to become unrivalled rulers on earth, achieving greatness in every aspect of life. Greatness of life depends mainly on two glorious things namely learning and wealth. Considered deeply wealth is more important than learning. Through wealth one can achieve prominance, fame, respect and honour. It brings you triumph and domination. Hence wealth is pre-eminent and therefore the most desirable object on earth! Then turning to her children she said, having listened to my words you would have realized what is really great and what is worth achieving. Seek you the position that is unconquerable and non- parallel. Only lord Shiva the mightiest of the mighties is capable of granting such great boons. Meditate on Him perfoming a massive Yaga (Godward sacrifice), hither to undone by any mortal or celestial, to invoke his blessings. Let you be blessed my sons in such a way that none shall harm you; none shall vanquish you; none shall surpass you in valoun victory and wealth" concluded Maya. The three sons Soorapathma, Sinhamuga and Tharaha fell prostrate at the feet of their parents and received their blessings.

## iv. Soorapathma's yagna

"We will aspire to achieve what you desire for us and promise to live up to your expectations", declared Soorapatma, with the two young brothers saying the same. They took leave forthwith determined to follow the course directed by Maya. Kasipa Muni still appeared to be under the spell of Maya and expressed reluctance to leave her. Maya told him that she was going to watch the interests of the children and beseeched him to go on his own way to resume penance.

Without loss of time, Soorapathma drew a massive plan for the Yaga. With his brothers he set out to the Northern region of Barath and selected a spot in the midst of a Banian Goove. The spot consisted of an area of 10,000 yochanas around which he constructed a massive wall. In

the midst of the encircled area he built a huge sacrificial pit, thousand yochanas in extent and depth and a hundred and eight pits girdling the central pit. In the middle of the central pit he installed a steel stake. All the things required for the performance of the sacrifice were brought in with the help of the mother. The Articles of sacrificial objects included the flesh of animals like lion, tiger, elephant, horse, buffalo and ram, ghee, various kinds of cereals and oils perfumery like musk and insence barks and sticks of poisonous trees and herbs and flowers of all sorts. After offering the preliminary poojas to all major Gods and minor ones to appease them he started the real performance of the sacrifice. In the already burning fire of the pit he threw masses of flesh, intermittently pouring jars of ghee and blood. At intervals he put defferent cereals and flowers in to the fire, off and on chanting various sorts of incantations untiringly and unswervingly. Soorapathma went on performing this ceremony invoking the appearance of Lord Shiva. Yet Shiva made no appearance. Dissappointed, yet undaunted, he rose high above and suspending himself in heaven, began to cut slices of flesh from his body and threw them into the sacri ficial fire. Yet Shiva appeared not. The desperate Asura then ran his body through the stake and fell into the pit. Soorapathma's brothers watching this horrendous sight decided that he had given up his life as a part of the sacrifice and roared in lamantation at the supposed loss of their brother. And all the men attending on Soorapathma joined in the wail. Sinhamuka feeling that his life was meaningless without his elder brother decided to jump into the fire and offer himself up in sacrifise.

## V. The Grand of Boons

The Grand Boons mean while Shiva appearing in the form of an old decrepit sage accosted Sinhamuka and inquired the cause of his mad decision. Sinhamuka, in the midst of tears, told him the woeful tale of his brother. "Console youself; I will bring back your brother to life". So saying Shiva (in sage's disguise) thought of Ganga the river Goddess for a while, at which instance she came surging and foaming, washed the feet of the Lord in obeisance enterd the sacrificial pit. Instantly Soorapathma arose appearing in his natural form unhurt and unharmed by the fire. At that instance Lord Shiva gave up disguise and appeared in his true form. Soorapathma expressed his boundless joy in terms of praise and prayer. Then Lord Shiva spoke to him thus: "You have been perfoming this yaga with the intent of seeking my grace. What is it that you desire? speak out. What you wish shall be granted". As Brahma, Vishnu and other celestials shook with fear at the prospect of the Asura Lord's indomitablity and supremacy, Soorapathma addressed Lord Shiva giving vent to his aspirations thus:

"Oh Lord of Lords! I should be the invincible ruler of all the worlds in the Universe with unquestionable authority to promote or punish vassals including the celestials, as I desire. I should be endowed with unperishble body. I should be provided with weapons whose valour cannot be surpassed even by the Lords of creation & protection. My another request is that I should have a vehicle that would travel faster than the mind".

In response to the Asura's requests the Lord, said "Of the thousand crores of worlds in the universe, you shall be the ruler of one thousand and eight worlds for a period of one hundred and eight yugas (or eons)". The Lord gave a chariot as vehicle called 'Indiragnala' for him to visit as and when he liked the worlds under his survey in an instant. In addition he gave him a lion along with several mighty weapons. The Lord gave him a discus that was far more ferocious and powerfue than that of Lord Vishnu. Soorapathma was posited in the Supreme status of being the over lord of the celestials, not to mention the humans and the inhabitants of the other worlds. Then addressing the brothers the Lord said: "There is none in the whole universe except my power that can defeat you." The brothers of Soorapathma also were granted several boons and supremacy over the celestials and in addition gave them weapons bearing his name. Wishing them an indomitable and prestigious life the Lord disappeared.

Sukkirachariar, the counsellor of the Asura clan, came to know of the Soorapathma's newly acquired power and prestige. He was happy to imagine that under the leadership of the three brothers the Asura clan would emerge victorious and powerful. Along with his disciples he met soorapathma who at the very sight of his Guru fell prostrate at his feet and made obeisance.

# சந்தேகம் தெளிதல்

விளக்கம் அளிப்பவர் : வாரணன்

"சந்தேகம் தெளிதல்" என்ற இப் பகுதிக்கு அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை எழுதி விளக்கம் பெறலாம்.

கேள்வி : திருமதி. தி. இந்திரா

1. சிவன் சிவந்த தாமரைப் பூப்போன்ற நிறத்தையுடையவர். கண்டத்தில் மட்டும்தான், நீலம் உடையவர், பார்வதிதான் நீலநிறம் போன்றவர் என்று புராணங்களில் படித்திருக்கிறோம். ஆனால் அனேக படங்களில், சமயப் புத்தக அட்டைகளில், இறைவனை நீல நிறமாகச் சித்தரிக்கிறார்களே இது ஏன்?

பதில் : சிவன் சிவப்பு நிறமாக ஞானிகளுக்குத் தோற்றமளித்ததை நூல்கள் வாயிலாக உணர்கிறோம். "சிவமெனும் செம்மேனி அம்மான்" என்ற அருளாளரின் உரையால் இதனை அறியலாம். அம்பிகையின் நிறம் நீலம். சிவனின் ஒரு பாகத்தைப் பங்கெடுத்த அம்பிகை நீலநிறமானவள் என்று சங்ககாலம் முதல் நம்பப்பட்டு வருகிறது. "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்று சங்க நூலில் கூறப்பட்டிருக்கிறது. சிவன் நஞ்சுண்ட கண்டன் என்பதால் கழுத்து மட்டும் நீலநிறமாக உள்ளது. "கறைமிடற் றண்ணல்" என்ற தொடர் இதை உணர்த்துகிறது. ஆனால் அவனின் நிறம் நீலம் அல்ல.

ஆகவே, சிவபெருமானை நீல நிறத்தில் படமாக வரைவது தவறானது. வேண்டுமானால் பெருமானின் அர்த்த நாரீசுவர வடிவத்தில் அம்பிகை பாகத்தை நீலமாக வரையலாம்.

கேள்வி : 2. திருக்கோயில்களில் அபிஷேகம் நடைபெறுகின்றது. பலவித பொருட்களால் அபிஷேகம் செய்கிறார்கள். சில பிரபல்யமான கோவில்களில் பால் கூடுதலாகப் போய்ச் சேருகின்றது. அப்படியான, நிறையப் பால் போய்ச் சேரும் கோவில்களில் சேரும் முழுப்பாலையும் அபிஷேகம் செய்வதைவிட்டு, ஓரளவு போதுமானதைப் பயன்படுத்தி மிகுதியை, எமது கண் முன்னேதான் பாலையே காணாத இளஞ்சிறார்கள் இருக்கிறார்கள். அனாதைமடங்கள், சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் என்று தாராளமாக உள்ளன. அங்கு போய்ச் சேரச் செய்தாலென்ன? அல்லது ஊற்றும் பாலை வீணே மண்ணுக்குள் போக விடாமல், சேகரிக்கக்கூடிய வழிகளைச் செய்து பயன்படுத்தக்கூடிய முறையில் ஆவன செய்யலாம் தானே? இதற்குரிய தங்கள் பதில் என்ன?

பதில் : திருமுருக கிருபானந்தவாரியாரின் கருத்துக்களை இதற்குரிய பதிலாகக் கீழே தருகின்றோம்.

பச்சைக் குழந்தை அலங்காரத்தை விரும்புவதில்லை. தாய், அக்குழந்தையின் மீதுள்ள அன்பினால் அலங்காரம் பண்ணிப் பார்க்கிறாள். அதுபோல் பக்தன், இறைவனுக்கு அபிஷேக ஆராதனை செய்து மகிழ்கின்றான். இறைவன் எல்லா உயிர்களிலும் கோயில் கொண்டிருக்கிறான். எனவே, இறைவனுக்குச் சுருக்கமாகச் செய்து, துன்பத்தால் துடிக்கின்ற ஏழை எளியவர்க்குப் பெருக்கமாகச் செய்வது சிறந்தது என்று நூற்றுக்கு நூறு நினைக்கிறவன் நான். அதை என் அன்பர்களுக்கும் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

(நன்றி - பக்தி)

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப

வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 01 | 15.05.2005 | ஞாயிறு | மாதப்பிறப்பு |
| 07 | 21.05.2005 | சனி | சனிப்பிரதோஷம் |
| 09 | 23.05.2005 | திங்கள் | பூர்ணை விரதம் |
| | | | வைகாசி விசாகம் |
| 12 | 26.05.2005 | வியாழன் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை |
| | | | முருகர் குருபூசை |
| | | | திருநீலநக்கர் குருபூசை |
| 14 | 28.05.2005 | சனி | அக்கினி நாள் முடிபு |
| 21 | 04.06.2005 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | | | கழற்சிங்கர் குருபூசை |
| 22 | 05.06.2005 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| 23 | 06.06.2005 | திங்கள் | அமாவாசை விரதம் |
| 27 | 10.06.2005 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| | | | நமிநந்தியடிகள் குருபூசை |
| | | | சேக்கிழார் குருபூசை |
| 29 | 12.06.2005 | ஞாயிறு | சோமாசிமாறர் குருபூசை |
| 30 | 13.06.2005 | திங்கள் | ஷஷ்டி விரதம் |

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

(10)

# புத்தக விற்பனை

- திருவாதவூரடிகள் புராணம்
(ம. க. வேற்பிள்ளை அவர்களின் விருத்தியுரையுடன்)
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்.
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு
- மகாபைரவர்
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு.

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.
தொ.பே: 2478885

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி
*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*

Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
வீமாஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.